126

# சக்ரவர்த்தினி.

“கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி”.

VOL-12 தொகுதி-12 | May 1917. மே௴ 1917. | No-10 பகுதி-10

## சேமம் புகினும் யாமத் துறங்கு.

பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்று வழங்கப்பட்டு வருவது கவனிக்கப்படுமாயின், பசித்திருத்தலும் தனித்திருத்தலும் விழித்திருத்தலும் நம்மனோர் யாவர்க்கும் நன்மை பயப்பனவாமென்பது நன்கு விளங்குவதாம். சிறிது பசியாகவிருக்கவே உணவுண்டு வருதலும், நல்லாரோடு பழகுதல் சம்பவியாத விடத்துத் தனித்திருத்தலும், பெருந்தூக்கங் கொள்ளாது அளவாகத் தூங்கி விழித்திருத்தலு முடையார்க்கு நோயும் பகையும் காரியக்கேடு முண்டாவதில்லையாம். விழித்திருக்கப் பழகுபவர்க்கே பசித்திருக்கப் பழகுதலும் தனித்திருக்கப் பழகுதலும் கூடுமாகலின், நம்மனோருள் ஒவ்வொருவரும் விழித்திருக்கப் பழகிவருதல் வேண்டும். முயற்சி யில்லாதவர் என்னவென்று சொல்லப்படுகின்றனர்? தூங்கு மூஞ்சி யென்றல்லவோ சொல்லப்படுகின்றனர். தூக்கத்தில் பெரும் பிரியங்கொண்டிருப்பவர் பசித்திருத்தலும் தனித்திருத்தலு முடியாமையின், அவர் புகழ்பொருள் புண்ணியங்களை யடையாது வருந்த முறுதல் நிச்சயமாம்.

“நெடுநீர் மறவி மடிதுயி னான்கும், கெடுநீரார் காமக் கலன்”—சோம்பலும், விரைந்து செய்வதனைத் தாமதித்துச்

செய்யுமியல்பும், மறப்பும், தூக்கமுமாகிய இந்நான்கும் இறக்குமியல்பினையுடையார் விரும்பியேறும் மரக்கலமாம்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தருளி யிருப்பதனைக் கவனித்து நோக்குவார்க்குச் சோம்பல் முதல் தூக்கமீறுயுள்ள நான்கும் ஒவ்வொருவர்க்கும் பெரும்பகையா யிருப்பனவாமென்பது நன்கு விளங்குவதாம். சோம்பலாய் விரைந்து செய்வதனைத் தாமதித்துச் செய்யுமியல்பும், மறதியும் யாரிடத்து நிலைபெற்றிருக்கின்றனவென்றாராய்ந்து நோக்குவார்க்கு அவை பெருந்தூக்கமுடையாரிடத்தே நிலைபெற் றிருக்கின்றனவென்பது விளங்காமற் போகாது. பெருந்தூக்கத்தை யொழித்துச் சோம்பலும் மறப்புமில்லாது விரைந்து செய்வதற்குரிய காரியத்தைத் தாமதஞ் செய்யாது செய்து வருபவர் புகழ் பொருள் புண்ணியங்களை யடைவது நிச்சயமாம். நாம் நமது ஞானத்தாயாராகிய ஔவைப்பிராட்டியார் ஆத்திசூடியில் "அனந்தலாடேல்-நித்திரையை நீ யதிகமாகச் செய்யாதிருக்கக்கடவாய்" என்று கூறியதனோடு நில்லாது, கொன்றைவேந்தனில் "சேமம்புகினும் யாமத்துறங்கு-காவற்கூடத்திற் சென்று ஒருவேலையு மில்லாதிருந்தாலும் நீ யாமப்பொழுதிற்குப் பின்னே நித்திரை செய்யக்கடவாய்" என்று கூறியிருத்தலைக் கவனித்து நோக்குவோமாயின், அளவுகடந்த தூங்குதல் பெருந்துன்பத்திற்குச் சாதனமாமென்பது நன்கு விளங்குவதாம்.

விழித்திருக்க விரும்புகின்றவர் போஜன நியமனத்தை மிகவுங் கவனித்தல் வேண்டும். சத்துவவுணவு, அசத்துவவுணவு, அபத்தியவுணவு என்று மூன்றுவகைகளில் சத்துவவுணவை யளவாகவுண்டு வருபவர் பசித்திருத்தலையன்றி விழித்திருத்தற்கு முரியவராவர். மரக்கறியுணவு சத்துவவுணவாம்; மாமிசவுணவு அசத்துவவுணவாம்; வியாதியைப் பெருகச்செய்யு முணவு அபத்தியவுணவாம். ஊசிய பழஞ்சோறு, அழுகிய பழமுதலியவற்றை யுண்ணாது, எப்போதும் [illegible] வுணவைச் சீரணிக்கு மளவாக நன்றாகப் பசியெடுத்தபின் உண்டு வருபவர் பெருந்தூக்கத்திற் கடிமையாவதில்லையாம்; அவர்க்குப் பெரும்பான்மையும் வியாதி வருவதில்லையாம். போஜன நியமனத்தைக் கடைப்பிடித்து, இரவில் ஒரு யாமமானபின் சயனக்கிருகத்திற்குச் சென்று படுத்துறங்கி, சூரியோதயமாவதற்கு 5 நாழிகைக்கு முன்னே

யெழுந்து நாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவருபவர் தாமடைய விரும்பிய பயனை யடையாதிராரென்பது நமக்கு நன்கு விளங்கியிருக்குமாயின், நாம் உறங்கும் விஷயத் தில் மிகு கவனமுடையவராக விருப்போம்.

சோம்பல், விரைந்து செய்வதனைத் தாமதித்துச் செய் தல், மறதி, துயில் என்னுமிந்நான்கும் நமக்குப் பெரும்பகையா யிருப்பனவா மென்றுணர்ந்து, இவற்றை யொழிக்க முயல்பவர் முன்னர்ப்பேருறக்கத்தை யொழிக்க முயலுதல் வேண்டும். அவர் பேருறக்கங் கொள்ளுதலை யொழித்துவிடுவாராயின், சோம்பல் முதலியவற்றை யொழித்தல் அவர்க்கு மிகு எளிதாயகாரியமாம். சூரியாஸ்தமான ஏழுநாழிகைக்கு (யாமத்திற்கு)ப் பின் உறங்கி, சூரியோதயமாவதற்கு 5 நாழிகைக்குமுன் எழுந்திருக்கும் வழக்கத்தை மேற்கொண்டு வருவது எவரிடத் திருக்கின்றதோ அவரே தாமத குணத்தால் தோன்றுவனவாய சோம்பலையும் மறதியையும் பிரயத்ன பூர்வகமாக வொழித்துத் தாம்விரைந்து செய்தற்குரிய காரியத்தைத் தாமதியாது செய்து புகழ் பொருள் புண்ணியங்களை யடைதற்குரியவரா யிருக்கின்றனர்; அவர்க்குப் பகைவருண்டாதலும் வியாதியுண்டாதலும் பெரும்பான்மையு மில்லையாம். ஔவைப் பிராட்டியார் ஆத்திசூடியில் "அனந்த லாடேல்" என்று கூறியதேயன்றி இல்லாது "வைகறைத் துயி லெழு—விடியக் கடவதாய காலத்தில் நீ தூக்கத்தினின்றும் எழுந் திரு" என்றும், கொன்றைவேந்தனில் "சேமம் புகினும் யாமத் துறங்கு" என்று கூறியதேயன்றி இல்லாது "ஒத்தவிடத்து நித்திரை கொள்—(முன் தூங்கிப் பின்விழித்தெழுதற்குத் தகுதியாய் மேடு பள்ளமில்லாது) ஒத்தவிடத்து நீ நித்திரை செய்யக்கடவாய்" என்றும் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதனை நாம் பெரிதுங் கவனித்தல்வேண்டும். சூரியன் அஸ்தமயமான ஏழுநாழிகை (மூன்று மணி)க்குப்பின் படுத்து, சூரியனுதயமாவதற்கு 5 நாழிக்கு (இரண்டுமணிக்கு) முன் விழித்தெழுந்திருத்தல் நமக்கவசியமான கடமை யொன்றுமெனத் துணிந்து இரவில் 17½ நாழிகை (7 மணி) காலம் தூங்கும் வழக்கத்தை மேற்கொண்டு வருவோமாயின் நாமேற் கொண்ட காரியத்தைக் கிரமமாக ஆலோசித்துச் செய்தற்குத் தகுதியுடையவராவோம்; இத்தகுதி நம்பிடத்துப் பூரணமா யிருக்குமாயின், (சீரு சிறப்பு நிலம்பொலிவு நெற்கட்டும் பேரும்

புகழும் பெரும்வாழ்வும்-ஊழும், வருந்திருவும் வாழ்நாளும் தரும்
இலக்குமியினருளை நாம் செவ்வையாகப் பெறுதற்குரியவ
ராவோம். இலக்குமியினருளைப் பெறுதலாவது பிணி, வறுமை,
பகை முதலியனவில்லாது நெடுநாள் வாழ்தலாம்.

உணவு, செயல், உறக்கமுதலியன மிகுமாயினும் குறையு
மாயினும் நோய் செய்வனவாயிருத்தலின், நாம் அவற்றில் மிகு
கவனமாக விருந்து வருதல்வேண்டும்; உணவும் செயலும் மிகு
மாயினும் குறையுமாயினும் உறக்கம் தக்களவாக வில்லாது
போவதாம்; போமாயின், நம்மிடத்து நோயே குடிகொண்
டிருப்பதாம். இரவு 9 - மணிக்கு மேல் - 4 மணி பரியந்த முறங்
கும் பழக்கத்தை மேற்கொள்வோமாயின், உணவிலும் செய
லிலும் மிதுகவனமுடையவராக விருப்போம். பகலிற் றூங்கு
தல், சூரியனுதயமாகுங்காலத்தில் தூங்குதல், சூரியன் மறை
யுங் காலத்தில் தூங்குதல், இரவில் அளவு கடந்த நேரம் தூங்கு
தல் என்னும் வழக்கமுடையவர்தாம் மூதேவி மக்கள் என்று
சொல்லப்படுகின்றனர்? மூதேவிமக்கள் நன்மையடைவது
கூடுமோ? நித்திரை செய்வதிலேயே பிரியமுள்ளவர், சோம்ப
லுடையவராயிருப்பவர், அவர்தாமெடுத்துக்கொண்ட காரியத்
தைச் சிரத்தையோடு செய்து முடிக்கமாட்டாரென்பது பேருறக்
கங் கொள்பவர்களைக் கவனித்து நோக்குவோமாயின் நன்கு
விளங்கும்; இரவில் 7½ நாழிக்குப் பின்படுத்து, விடிய 5 நாழி
கைக்கு முன் எழுந்திருக்கும் பழக்கமுடையவர் சோம்பலும்
தாமெடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில்
அசிரத்தையுமுடையவரா யிருப்பதில்லையாம். நாம் மனத்தை
யெப்போதும் நல்லவர் சகவாசத்தால் தெளிவுடையதாகச்
செய்து வருவோமாயின், கும்பகர்ணன்போல் நித்திரையின்
வசமாய்க் கெடாது நல்வாழ்வடைதற்குரியவராவோம்.

இரவில் படுத்துறங்கப் போகுஞ்சமயத்திலும் விழிக்குஞ்
சமயத்திலும் நல்லெண்ணமுடையவராயிருக்கப் பழகிவருதலும்
வேண்டும்; வந்தாற்றான், நாம் செய்யத்தக்கனவற்றைக் கிரமமாகச்
செய்தற்குரியவராவோம். "வைகறை யாமந் துயிலெழுந்து தான்
செய்யும், நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில், தந்
தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே, முந்தையோர் கண்ட

றூறை" என்றும், "அந்திப் பொழுது கிடவார்" என்றும், (பாழ் மனையும் என்னுஞ் செய்யுளில்) "பகல்வாயார், கோயின்மை வேண்டுபவர்" என்னும் ஆசாரக்கோவை கூறுவதும், "புத்தி யதற்குப் பொருத்தாக் தெளிவளிக்கும், சத்த நாம் மனைற் றூய்மையுறும்—பத்தொழியும், காலைபுரி வாதபித்தம் தத்தகிலை மன்னுமதி, காலைவிழிப் பின்குணத்தைக் காண்" என்று வைத்திய நூல் கூறுவதும் நன்கு கவனிக்கப்படுமாயின், காவற்கூடத்திற்குச் சென்றுவும் யாமத்திற்குப் பின் உறங்குதலும் விடிதற்குமுன் னெழுதலும் ஒவ்வொருவர்க்கும் அத்தியாவசியகமான கடமையாமென்பது நன்கு விளங்குவதாம். ஆநந்த ராமாயணம் இராஜ்யகாண்டத்தில் ஸ்ரீராமர் நித்திராதேவிக்கு கீர்த்தனம், புராணச் சிரவணம், வேதபாடம், பூசை, ஜபம், தவம், தியானம், ஹோமம் முதலியவற்றைச் செய்யும் பாகவ ரிடத்தும் மூடன் பாலன் முதலியவர்களிடத்திலும் சென்று வசிக்கக் கடவாய் என்று வரங்கொடுத்தாரென்று கூறுவதை நாம் பெரிதுங் கவனித்து, நித்திரையின் வசமாகாது, அதனை நம் வசமாகச் செய்து வருவோமாயின், நல்லனவற்றை யெல்லாம் பெறுதற்குரியவராவோம். இது நிச்சயமாம்.

## ஆசார மஞ்சரி.

(முன் தொடர்ச்சி)

ஒவ்வொருவரும் விடத்தக்கவை யிவை யெனல்.

(90) அறிவுடையார் எப்போதும் ஒருவர் தமது தலையில் முடித்தபூவைத் தாமுடியார்; ஒருவர் மோந்த பூவையும் சூடார்; பிராமணர்கள் பசுவினைக் கொடுத்தால் அதனை யேற்றுக்கொள்ளார்; புலையர்க்கு எச்சிலுணவைக்கொடார். (முடித்தல், சூடுதல், ஏற்றல், கொடுத்தல் என்னு மிந்நான்கும் எப்போதும்) விடத்தக்கனவாம்.

மூத்தோர்முன் செய்யத் தகாதன இவையெனல்.

(91) எவரும் காட்டிலேயாயினும் தம்மினு மூத்தவரிருப்பாராயின், அவர்முன் உடம்பின் மீது போர்வையைப் போர்த்

திருத்தலும், இறுமாக்கிருத்தலும், இரண்டு கால்களையும் சேர்த் திணைத்திருத்தலும் செய்தல் கூடாது; செய்வாராயின், அவரைப் பழிப்பதற்கு எல்லையாம். இறுமாக்கிருத்தல் - கர்வித்திருத்தல். இரண்டு கால்களையும் சேர்த்திணைத்திருத்தல் - ஒரு காலின்மீது மற்றொருகாலை வைத்திருத்தல்.

நற்கருமங்களை அந்தணரிடத்தே நல்ல நாள் கேட்டுச்
செய்யவேண்டுமெனல்.

(92) அறிவுடையார் மேலான நற்கருமங்களைச் செய்யு மிடத்து எப்போதும் புலவரிடத்து நல்லநாள் கேட்டுச் செய் வார்; தமது கருமங்களில் குறைவு படுதலில்லாத அந்தணரது வாயினின்றும் வரும் சொல் எப்போதும் தவறுவதில்லையாகலின், அவரிடத்து நல்லநாள் கேட்டுச் செய்வர்.

அந்தணர் - பிராமணர்; அதன்பொருள் அழகிய தண்மை யுடையவ ரென்பது. தண்மை - கருணை.

அறிவுடையார் இவைசெய்யாரெனல்.

(93) அறிவுடையார் சான்றோர் கூடியுள்ள சபையில் யாதொரங்கசேஷ்டையுஞ் செய்யார்; மாசுள்ளவற்றைத் திமிர்த் துக்கொண்டு நடவார்; எந்தச் சமயத்திலும் கடுஞ்சொற்களைக் கூறார்; இருவர் கூடிப்பேசுமிடத்துச் செல்லார். (அங்கசேஷ்டை செய்தல் முதலிய நான்கும் அவசியமாக விடத்தக்கனவாம்).

சான்றோர்-குணங்களால் நிறைந்தவர் மாசு-அழுக்கு.

ஐயமில் காட்சியவர் செயல்களிவையெனல்.

(94) ஐயமில் காட்சியுடையார் தமது குரவர் முன்பு கையைச் சுட்டிக்காட்டிப் பேசார்; காலின்மீது ஒன்றனை வைத் தெழுதார்; கல்வி கேள்வி அறிவு ஒழுக்கமுதலியவற்றை யுடையா ரோடு அவை யில்லாதவரை யொப்பிட்டுக் கூறி, தாங் கூறியது உண்மையென்று சாதியார்; குரவர் தம் கரத்தால் கொடுப்பன வற்றை யுட்கார்ந்துகொண்டு வாங்கார்.

ஐயமில் காட்சி-சந்தேகமில்லாத அறிவு; குரவர் - ஆசிரியர்.

பொன்போற் காக்கத்தக்கவை யிவை யெனல்.

(95) ஒருவன் தன்னுடம்பும், தன்மனைவியும், தன்னிடத்
தொருவன் அடைக்கலமாக வைத்தபொருளும், தான்தன் னுயிர்க்
குதவியாகவேண்டுமென்று கருதிச் சேர்த்துவைத்த பொருளு
மாகிய இந்நான்கையும் பொன்னைப்போலப் பாதுகாத்து நடக்கக்
கடவன்; அவ்வாறு நடவானாயின், அஃதவனுக்குப் பெருந் துன்
பத்தைக் கொடுக்கும்.

இவ்விவ்வாறொழுகுவாரிடத்து ஆசார மிருக்குமெனல்.

(96) தனது ஆக்கத்தை விரும்பும் எறும்பும், தூக்கணாம்
பறவையும், காக்கையும் என்றுமிவற்றின் செய்கைகளைப்போல
நன்மை தருவனவாகிய தமது கருமங்களைச் சோர்வில்லாது மேற்
கொண்டு தமது கருமங்களை அவற்றின் தன்மைபோல முயன்று
செய்து வருபவரிடத்து ஆசாரமானது எல்லாவகையானும் சிறப்
புற்று விளங்கும்.

ஆக்கம் - விருத்தி; தூக்கணாம் பறவை - தூக்கணாங்குருவி;
ஆசாரம் - இல்லறவொழுக்கம்.

இல்லறத்தார்: எறும்பு கிடைக்காத காலத்தில் தனக்கு உத
வியாமாறு கிடைத்தகாலத்தில் உணவைச் சேர்த்து வைப்பது
போலக், கிடைக்காத காலத்தில் தமக்குதவியாமாறு கிடைத்த
காலத்தில் உணவிற்கு வேண்டியவற்றைச் சேர்த்துவைத்துக்
கொள்ளுதல் வேண்டும்; தூக்கணாம்பறவை குளிர் காற்று முதலிய
வற்றினின்றும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதற் பொருட்டுக்
கூடுகட்டிக் கொள்ளுதல்போலக் குளிர்காற்று முதலியவற்றினின்
றும் தம்மைப் பாதுகாத்தற் பொருட்டு வீடுகட்டிக்கொள்ளுதல்
வேண்டும்; காக்கை தன்னினத்தைக் கூவியழைத்து அவ்வினத்
தோடே தனக்குக் கிடைத்தவுணவை யுண்ணுதல்போல உறவி
னரை யழைத்து அவருடனே தமக்குக்கிடைத்த உணவை உண்
ணுதல்வேண்டும்; இவ்வாறொழுகுவாரிடத்து ஆசாரம் சிறப்
புற்று விளங்கு மென்பதாம்.

### பெரியாரிடத்துச் சொல்லும் ஒழுக்கத்தைக்கூறல்.

(97) அறிவுடையார் பெரியாரிடத்து யாதேனு மொன்று உரைக்க நேர்ந்தால், எழுந்துநின்றேனும் கையால்வாய்புதைத்து நின்றேனும் அதனை உரைப்பாரேயல்லாமல், வேறுவகையாகவுரையார்; அவர் முன்பறியாதது உள்ளே யாராய்ந்து உரைப்பர்.

### சூதாடுதல் முதலிய இடங்களிற் செல்லுதல் கூடாதெனல்.

(98) பேதைமையில்லாதவர் சூதாடு மிடத்திலும் ஆரவாரம் நீங்காத விடத்திலும் செல்லமாட்டார்; செல்வாராயின், அவர்க்கது துன்பத்தைத் தருவதாம்.

பேதைமை - செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இது என் றுணராமை; ஆரவாரம்-பேரிரைச்சல்.

### நடுக்கற்றகாட்சியார் செயல்களிவையெனல்.

(99) நடுக்கற்ற காட்சியுடையர் ஆரவாரஞ் செய்யுமிடத்தி லும் மடைப்பள்ளியிலும் பெண்கள் வசிக்குமிடத்திலும் நோக்கிச் செல்லார்; (தம்மை வாருங்களென்று உபசாரமாகக் கூறல்) எடுத்து அழையாதவர் வீட்டிலும் செல்லார். ஆரவாரஞ் செய்யுமிட முதலியவற்றில் செல்லுதலை யெவ்வொருவரும் விடுதல் வேண் டும். நடுக்கற்றகாட்சி - சோர்விலாத அறிவு; மடைப்பள்ளி - சமையலறை.

### ஆசாரமில்லாதவ ரிவரெனல்.

(100) குறிப்பிட்டறியமுடியாத தேசத்தான், வறியவன், மூத்தவன், சிறுவன், இறந்தவன், பயமுற்றிருப்பவன், உணவுண் பவன், இராஜாங்க காரியத்தில் தலைமையாயிருப்பவன், கலியா ணப்பிள்ளை யென்னும் இப்பதின்மரும் ஆராய்ந்துரைக்குமிடத்து உண்மையான ஆசாரமில்லாதவராகத் தோன்றுவர்.

வறியவன் - கல்விச்செல்வம் அல்லது பொருட்செல்வமில்லாத வன்; மூத்தவன் - கிழவன்; உணவுண்பவன் - பேருணவுகொள்பவன்.

முற்றிற்று.

---

## Special to the "Chakravarthini".

# கிரீக் தேசத்துப் பீமசேனன் கதை.

### பீமசேனனும் பொன் மாம்பழங்களும்.

(முன்தொடர்ச்சி)

இவன் காடு, மலை, வனம், நீர்ப்பரப்பு முதலியவெல்லாம் கடந்து போய்க்கொண்டிருந்தான். அப்படிப்போகும்போது தன் கையிலிருந்த பெருந்தடியைச் சுழற்றி, தேக்கு முதலிய பெரு மரங்களின் பெரிய கிளைகளை அடித்து ஓர் அடியாலேயே முறித்துத் தள்ளினான். இவ்வாறு செய்துகொண்டு போகும்போது சமுத்திரத்தின் இரைச்சலைக் கேட்டான். கேட்ட மாத்திரத்தில் அது அருகில் இருக்கிறதென்று நினைத்தான். சீக்கிரத்தில் கடற்கரையை அடைந்தான். அங்கே பெரிய அலைகள் வெண்மையான நுரையோடு கரையிலுள்ள மணற் பரப்பின்மேல் வரிசை வரிசையாக இருந்தன. அங்கு ஒரு பக்கத்தில் ஒரு சேர்த்தியான இடம் இருந்தது; அதில் பசுமையான புற்கள் நிறைந்த செங்குத்தான பாறையுண்டு. புற்களின் பசுமையால் அந்தப் பாறையின் பக்கங்கள் மிருதுவாக இருப்பதாகவும் அழகாகவும் காணப்பட்டன. அங்கே பீமசேனன் என்ன பார்த்தான்? ஒரு கிழமனிதன் செவ்வையாகத் தூங்குவதைப்பார்த்தான். அவன் கிழமனிதன்தானோ என்ற ஓர் ஐயமும் அவன் மனதில் தோன்றினது. இதற்குக் காரணம் அவனது முதல் பார்வைக்கு அங்குத் தூங்குகின்றவன் கிழமனிதனைப்போலக் காணப்பட்டான். ஆனால் மறுபடியும் பார்க்கும்போது அவன் சமுத்திரத்தில் வசிக்கின்ற ஒரு ஐந்துவைப்போல் பீமசேனன் கண்ணுக்குத் தோன்றினான். இதற்குக் காரணம் அவனுடைய கால்களிலும் கைகளிலும் மீன்களுக்கு இருக்கிறதுபோல் செதில்கள் இருந்தன. அவனுடைய பாதம் வாத்தின் பாதங்கள்போல் இருந்தன. அவனுடைய நீண்டதாடி சமுத்திரத்தின் நாணல்புல் கற்றைப்போல இருந்தது.

ஆனால் பீமசேனன் இவனைப் பார்த்த மாத்திரத்தில் சமுத்திரக் கிழவன் வாஸ்தவத்தில் இவன்தான் என்றும், பொன் மாம்பழங்கள் கிடைக்கக்கூடிய தோட்டத்தைத் தனக்குக் காட்டக்கூடியவன் இவனே என்றும் தீர்மானித்தான். பீமசேனன் அவ

னிடத்து மெதுவாக வந்து அவனது கையையும் காலையும் பிடித்துக்கொண்டான். அவன் செவ்வையாக விழித்துக் கொள்வதற்கு முன்னமே அவனைப்பார்த்துப் பொன் மாம்பழங்கள் கிடைக்கக்கூடிய தோட்டத்திற்கு வழியைத் தனக்குக் காட்டும்படிக்குக் கேட்டான். கிழமனிதன் அவனைவிட்டு விலகிப்போகப் பிரயத்தனப்பட்டான். பீமசேனன் அவனை உறுதியாகப் பிடித்துக்கொண்டிருந்தபடியால் அவனது பிரயத்தனம் வீணாயிற்று.

உடனே அக்கிழவன் பீமசேனனை நோக்கி, “உனக்கு என்னிடத்தில் என்ன வேண்டும்? என்னை ஏன் இவ்வளவு கெட்டியாய்ப் பிடித்திருக்கின்றாய்? என்னைவிடு; நான் உடனே போகட்டும்” என்று சொன்னான். இதற்கு விடையாய்ச் சத்தமிட்டு “என்பெயர் பீமசேனன்; பொன் மாம்பழத் தோட்டத்தின் குறுக்குவழியை நீ சொல்லும்வரை நீ என்னைவிட்டுப் போகமுடியாது” என்று சொன்னான்.

பீமசேனனின் சரீர வல்லமையையும், அவன் அடிக்கடி செய்த பெரும் அற்புதங்களையும் இவன் முன்னமே கேட்டிருந்தான்; ஆகையால் அவன் இன்னுமொன்று சொல்லக் கேட்ட மாத்திரத்தில், அவனைவிட்டுப் போவதற்குச் செய்யும் பிரயத்தனம் வீணாகுமென்று தெரிந்துகொண்டான். உடனே பொன் மாம்பழத் தோட்டத்தைக் கண்டறியும் விதத்தையும், அங்கே போகும் வழியில் உள்ள அபாயங்களையும் சொன்னான்.

மேலும் அவனுக்கு “ஆகாயத்தைத் தோள்களில் தாங்கிக் கொண்டிருக்கிற ஒருபெரிய ராட்சசனைக் கண்ணில் காணும்வரை நீ இவ்வாறு போகவேண்டும். அந்த இராட்சசன் நல்ல சந்தோஷமான மனதோடிருக்கும்போது நீ அவனைப் பிடிப்பாயானால், அவன் அந்தத் தோட்டமிருக்கிற இடத்தைக் குறிப்பாக உனக்குச் சொல்லுவான்” என்பதையும் சொன்னான்.

உடனே பீமசேனன் தன் கையிலிருந்த பெருந் தடியைச் சுழற்றி, தன் கைவிரல் முனையில் அதை நிறுத்தி விளையாடிக் கொண்டு கிழவனைப்பார்த்து, “அவ்விராட்சசன் நல்ல மனதோடு இராமல் இருக்கும் பட்சத்தில் அவனை நன்மனம் பெறும்படிக்குச்செய்ய ஒருவழி நான் அறியவேண்டும் அல்லவா!” என்று கேட்டான். அதற்கு ஒரு நல்ல உபாயம் அவன் சொன்னான்.

டனே இச்சமுத்திரக் கிழவனுக்குப் பீமசேனன் வந்தனம் செலுத்திவிட்டுப் போய்விட்டான். பல வனங்களின் மூலமாயும் தன்னால் கூடிய வேகமாய் நடந்தும் போய்ப் பெரிய சமுத்திரக் கரையைச் சேர்ந்தான். இங்கே தரையுள்ள ஆழமான பெரிய கடல்தவிர வேறொன்றும் எதிரில் காணப்படாமையால், அங்கே அவனுடைய வழி முடிவதுபோலத் தோன்றினது. ஆனால் தலை தூக்கிக் கண்போகிறவரைக்கும் தூரத்தில் அவன் பார்த்தபோது, வெகு பிரகாசமாக இருக்கும் ஏதோ ஒன்றைப்பார்த்தான். கடைசியில் அது மிக அருகில்வந்தது; அது நன்றாகப் பிரகாசிக்கும் பித்தளையால் செய்யப்பட்ட ஒருவட்டில்போன் றிருப்பதையும் பார்த்தான்; அது மிகப்பெரியது; அது பித்தளையால் செய்திருந்தபோதிலும், ஒரு துரும்பு நீர் ஓடையில் மிதப்பதுபோல் அந்த அலையின்மீது மிதந்து வந்தது; பீமசேனன் நிற்குமிடத் தருகே தங்கினது.

அவன் அதை என்ன செய்வதென்று தெரிந்து கொண்டான். அவன் சமுத்திரத்தைக் கடந்து தோட்டத்திற்குப் போகவேண்டு மென்று எண்ணிய யாரோ ஒருவரால் இது அனுப்பப்பட்டிருக் கிறதென்பது நன்றாய்த் தெரிகிறது.

உடனே பீமசேனன் அதன்மீது குதித்து அதினுள்ளே மெள்ள கீழே இறங்கி, அங்கே தனது சிங்கத்தோலைப் பரப்பி, படுத்து நன்றாய்த் தூங்கிவிட்டான். (வரும்).

வ. ஆறுமுக செட்டியார், சென்னை.

## நட்பில் பிழைபொறுத்தல்.

உறவுகொண்ட ஒருவன் பொல்லாங்கான காரியத்தைச் செய்து விடுவானாயினும் அவனையல்லாமல் நேரிட்டகுற்றமென்று எண்ணி அதைக்குறித்து வருந்தாமல் பொறுத்துக்கொள்வோர் நல்லோர் என்பது நட்பில் பிழைபொறுத்தலாம்.

ஒருவனை நல்லதுணைவனென்று நினைத்து விரும்பி நட்புக் கொண்ட பின்பு அவனிடத்து ஒரு பண்பாடுமில்லாதிருந்தா லும் ஒருதரம் நட்புக்கொண்டபடியினாலே அவனைக்கைப்படுத்தித் தமக்குச் சார்பாகக்கொள்ள வேண்டியதேயல்லாமல் அவனை

அறியாமையை வெளியிட்டுப் பேசலாகாது. அஃதெப்படியெனில், நெல் உமியையும், நீர் நுரையையும், புஷ்பம் புல்லிதழையும் தம் தம் நற்குணத்தால் தழுவிக்கொண்டிருப்பது போலவாம்,

அணையிலே கட்டப்பட்டிருக்கும் ஜலம் அவ்வணையை உடைத்துக்கொண்டு போய்விடுமாயின் அதற்காக ஜனங்கள் அதை விட்டுப் பிணங்கிக் கொண்டிருப்பார்களோ? இரார்கள்; என்னெனின், அந்த ஜலம் ஸகலப்ராணிகளுக்கும் ஜீவாதாரமாயிருக்கிறபடியினாலே அதைப்போக வொட்டாமல் மறுபடி அணைபோட்டுக் கட்டிக்கொள்வார்களல்லவா? அதுபோலவே ஒருவனை வருந்தி நட்புக்கொண்ட பின்பு அவன் வெறுக்கும்படியாய்ப் பேசினாலும் பொறுத்துக்கொள்ள வேண்டியதே நட்பாளருக்குக் கடமையாம்.

நட்புக்கொண்ட ஒருவன் பொறுக்கத்தகாத ஒருகொடிய பொல்லாங்கைச் செய்தாலும்ஒருகால் நட்புக்கொண்டபடியாலதை நாடிப் பொறுத்தல்வேண்டும். இல்லாவிடில் நட்பு நீடித்திருப்பது கடினம்.

ஒருவன் தனக்குப் பொல்லாங்கு செய்வோனை ஸ்நேஹனாக வுடைத்தாயிருந்தால் அவன் செய்த பொல்லாங்கைப் பொறுத்துத் தனக்குள்ளே யடக்கிக்கொள்ள வேண்டுமேயல்லது அதற்காக அவனை விட்டுவிடலாகாது; எப்படியெனில், எல்லாப்பொருள்களையும் பஸ்மமாக்கும் அக்னியைக்கூட அதன் ஜ்வாலையை யிதப் படுத்தி ஜனங்கள் தங்கள் வீட்டுக்குள்ளடக்கி வைத்துக்கொள்ளுந் தன்மை போலேதான்.

ஒருவன் தன்கை விரல் தன் கண்ணிற்பட்டதென்று அதைத் தறித்து விடுவானோ? அதுபோல ஒருவனும் தன்னிடத்தில் நட்புக்கொண்டவர்கள் பொல்லாங்கான காரியத்தைச் செய்தாரென்று அவர்களை விட்டுவிடலாகாது. விட்டுவிட்டால் உலகம் பழிக்கும். இதற்குப்ரமாணம், "கூடிப்பிரியேல்" என்று ஔவை சொல்லிய நீதியை விட வேறு வேண்டுமோ?

நல்லவர்களையே நல்லவர்கள் ஸ்நேஹிக்க வுடன்படுவார்கள். அப்படி ஸ்நேஹித்த பின்பு காலதேச வர்த்தமானத்தா லவர்களால் தமக்குப் பொல்லாங்கு நேரிடுமாயி னதைத் தமக்குள்ளே யடக்கிக் கொள்வார்களே யல்லாமல் வெளியிட்டுப் பேசார்கள்.

நெறிவன் தயை வெளியிட்டுப் பேசுவார்களாயின் அவர்களுக் குற்றமுண்டாவார்கள். ஆதலாலதை மறைத்துவிட வேண்டும்.

தன்னாலே காதலிக்கப்பட்டவர்கள் செய்த காரியம் பிராண னுக்கு அபாயத்தைக்கொண்டு வரும்படியானதாக விருந்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு அவர்கள்செய்த குற்றத்தை மன் னிக்கவேண்டும். மன்னிக்காமல் அதை வெளியிட்டால் அச் சேர்க்கையானது தன்னையுந் தொடர்ந்து தீவினை செய்யுமென்று நூன்றேர்ந்தோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆதலால் வாசனையுள்ள புஷ்பத்தோடு கூடிய இழிவான நாரையும் பெரியோர்கள் அங்கீகரிப்பதுபோல நட்பை யுடையவர் களால் உண்டாகிய குற்றங்களையும் நட்பாளர் பொறுத்துக்கொள் ளல்வேண்டும்.

---

## தீநட்பு.

ஒருவனுக்கு வறுமைவந்த காலத்தில் சேர்ந்ததை மறந்தும், செல்வம் வந்தபொழுது பழமை பாராட்டி உதவி செய்யென்றவ ரும் புற நட்பாளரே யன்றி உண்மையானவர்களல்ல—அவர்களை உரிமையுள்ளவர் நினைக்க மனத்திலும் நீக்குகிறோம்.

துஷ்டர்களானவர்களுடைய நட்பைத் தொருவரும் இடங்கொ டுக்கலாகாது; ஒருவேளை அகஸ்மாத்தாய் அப்படிக்கொத்த நட்பு நேரிட்டு வ்ருத்தியாகுமாயின் அதனாலே அவர்கள் செய்யுங்கொடு மைக்குத் தாமுமுட்பட்டு ஆபத்தாகிய துன்பத்தை யடைய வேண்டும். ஆதலால் தீநட்புக் கிடங்கொடுக்கலாகாது.

ஸஜ்ஜனராகிய நல்லோருக்குத் தீயோருடைய ஸஹவாஸம் பொருந்தாது. ஒருவேளை அபூர்வமாக நேரிட்டிருந்தாலும் அத னால் தீங்குண்டாகுமென்கிற அச்சத்தால் அவர்கள் பின்னைப்பூச்சி போல ஒட்டியு மொட்டாமலுமிருந்து நீக்கிவிடுவார்கள்.

நல்லோர்களுடைய நட்புப் பயனுண்மையைக் கொடுக்குமென் பதை யுணர்ந்த தீயோர் அவர்களோடு ஏன் நட்புக்கொள்ள விரும்புகிறார்களென்றால், அவர்களுக்கு அறிவு சோர்வுபடுங் கா லத்தில் அவர்களுடைய பொருளை அபஹரிப்பதற்குத் தான்.

ஒருவனாலே பலநாளும் பல நன்மைகளைப்பெற்று அதை மறந்து அவனுக்கு கேட்ட துன்பத்திற்குத் தானும் அஞ்சப்படாமல் கெடுதி செய்வோன், நட்பாளரில் கடைமையானவன் என்று சொல்லப்படுவோன்.

அறிவுடையவன் ஒருவனிடத்தில் பகைமை மேற்கொண்டிருந்தாலும் அவனுக்கு ஆபத்துவந்த விடத்து உதவியைச் செய்வானேயல்லது கெடுதியைச் செய்யப்பார்க்கப்படான்; அறிவிலானோவெனில் மிகுதியான பலனை ஒருவனாலே அடைந்திருந்து அதை நினையாமல் அபசாரத்தைச்செய்ய உடன்படுவான்; ஆதலால் அறிவிலானுடைய உறவைப்பார்க்கிலும் அறிவுடையவனது பகையினால் பலனுண்டென்று சொல்லப்படுகின்றது.

பிருத்த ஸ்நேஹ நெருக்கத்தினாலே பேதமின்றி விரும்பிக் கேட்கும் காரியத்தை எளிதில் நிறைவேற்றிக் கொடுக்க இடமுண்டாயிருந்தாலும் த்ரவ்யாசையால் அதை மற்றொருவனுக்கு அனுகூலப்படுத்திக் கொடுப்போன் பொருத்தமுள்ள ஸ்நேஹனாயிருந்தபோதிலும் அவன் ஸ்நேஹத்தை அப்பொழுதே விட்டு நீங்கியிருக்க வேண்டியதே தர்மமென்று சொல்லியிருக்கின்றது.

தொழில் செய்வதினிடத்துப் பகையாகவும், வசனிப்பதினிடத்து நட்பாகவுமிருக்கின்றவனது நட்பு நினைவிலே மாத்ரமல்ல; கனவிலும் துன்பஞ் செய்யுமென்பதற்கு ஐயப்பட வேண்டியதில்லை.

தனித்த விடத்தில் மேல் விழுந்து நகைசெய்து பலர்கூடிய சபையினிடத்தில் உரிமையில்லாத அன்னியனைப்போலக் குறிப்பித்துக் கொண்டிருப்போனது நட்பை (பிணிக்கு மருந்தூட்டி நிவர்த்தி செய்வது போல) நிவர்த்திசெய்து விடவேண்டியது.

ஆதலால் நன்மையைப்பாராத தீயோருடைய சேர்க்கையால் விபரீத முண்டாகுமென்று நினைத்து அத்தீயஸஹவாஸத்தை விட்டு நீங்கியிருத்தல் வேண்டும்.

# பக்தி.

(முன் தொடர்ச்சி)

இனி எந்த உத்தேசத்தினால் குரு சிஷ்யனுக்கு உபதேசிக்கின்றார் என்று பார்த்தல்வேண்டும். இதுதான் குருவினது மூன்றாவது இலக்ஷணமாம். குரு திரவியத்தை யிச்சித்தோ யசசையிச்சித்தோ அல்லது சுயநலத்தின் பொருட்டு வேறு யாதேனுமொன்றை உத்தேசித்தோ, உபதேசஞ் செய்யற்க. மனிதரிடத்து முழுமையுள்ள சிநேகத்தினால் மாத்திரம் அவர் பிரவிர்த்திக்கவேண்டும். சிநேக மாத்திரத்தினாற்றான் ஆத்மோபதேசஞ் செய்தல் வேண்டும். திரவியம் வேண்டுமென்னும் ஆசை, புகழ்வேண்டுமென்னும் இச்சை முதலிய சுயநலத்தைக் கருதிய உத்தேசத்துடனாயின், யாவும் குழப்பமுடையனவாம்; கடவுள் பிரேமை வடிவினராவர். அன்னமறியும் குரு மாத்திரத்தான் மனிதருக்கு ஆத்மோபதேசஞ் செய்யத் தகுதியுடையவராவர்.

உபதேஷ்டாவினிடத்து இத்தகைய குணங்களெல்லாம் பூர்த்தியாக விருக்கின்றனவென்று அறிந்தபின்னர் சிக்ஷன் ஒன்றற்கும் பயப்படவேண்டுவதில்லை; இத்தகைய குணங்கள் குருவினிடத்து இன்றாயின் அவனது உபதேசத்தை அங்கீகரிப்பதில் கவனம் வைத்தல்வேண்டும். ஏனெனின் அத்தகையனுக்கு நம்மிடத்து நன்மையை வளரச்செய்யக்கூடாது. அன்றியும், அவன் நம்மிடத்துத் தீமையையும் வளரச்செய்வன். ஆகையினால் இத்தகைய தோஷத்தைக் கவனித்தல் அத்தியாவசியமாம்.

“ ஶ்ரோத்ரியோ வ்ருஜினோ காமஹதோ யோ
ப்ரஹ்மவித்தம: ”

பொருள்:—வித்வானும், பாபமற்றவனும், காமமுதலிய தோஷங்கள் பற்றவனுமாகிய புருஷன்தான் உத்தமனாகிய பிரஹ்மஞானி”

முற்புகன்றவையால் நமக்கு ஆத்மஞானம் கிடைப்பதற்கும், பக்தர்களாவதற்கும், எல்லாவிடத்திருந்தும், எல்லாமனிதரிடத்திருந்தும் ஆற்றலுண்டாவதின்றும். பிரகிருதியில் நமது நாற்புறமும் காணப்படும் நதி கடல் முதலியன, பர்வதங்கள் அன்றியும் மற்றும் சகல பதார்த்தங்களும் நமக்கு ஈஸ்வரதத்துவத்தை யுபதேசிக்கின்றன. அவை அத்தியாத்மிகமாகிய விஷயங்களை,

விளக்கும் புஸ்தகங்களின் - இல்லையாகும். அவற்றிலிருந்து நாம் பல உண்மைகளை யறிந்துகொள்ளக் கிடக்கின்றது." என்றும் மற்றுமுள்ள சில அழகிய ஏற்பாடுகள் மிகவும் நன்றாயிருக்கின்றன. அவைகளெல்லாம் நல்லவைதாம்; ஆனால் தனக்குத்தானே அறிவு தெளிந்து ஞானத்தை யடையாத ஒருவனால், பிறர்க்கு ஞானோபதேசஞ்செய்ய ஒரு சிறிது மியலாது. என்றால் இயற்கையாகக் காணப்படும் பொருள்கள் எவருக்குக் குருவாய்த் தோன்றுகின்றன? மனத்தெளிவை யடைந்து ஆத்ம ஞானோபதேசத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியான ஆத்மாவிற் கவைகளெல்லாமின்றி யமையாதன. தன்னிடத்துள்ள ஆன்ம ஒளியை விளக்கச் செய்வதான வல்லமை அறிஞான ஆசிரியரிடத்திலிருந்து வரவேண்டியதாயிருக்கின்றது. இவ்வாறு மனத்திற்குத் தெளிவு வந்து ஞானோபதேசத்திற்குத் தகுதியடைந்தால், பிறகு அந்த மனத்திற்கு உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் குருமயமாகவே தோன்றும் ‡ எனவே, கலக்கிய மனத்தர் உலகமுழுவதிலுந் தோன்றும் எப்பொருளிலும், யாதொரு விசேஷத்தையுங் காண்பதில்லை. ஒரு குருடன் மிக அழகிய பொருட்காட்சிச் சாலைக்குப் போனால், அவன் அங்குச்சென்றதால் எந்தவழியாலும் யாதொரு பயனையு மடைவதில்லை; முதலாவது கண்தெரியவேண்டும்; அப்பொழுது மட்டுந்தானெதிரிலுள்ள பொருள்களை யெல்லாமவன் கண்டு அவற்றைப்பற்றி யெல்லாம் அவன் நன்கறிந்துகொள்ள முடியும். அறிவுத்தேட்டத்தில் முயன்றவனுக்கு ஞானக்கண் திறந்துவிடுபவரே ஆசிரியர்-குரு-எனப்படுவார். ஆதலால் எங்களிடம் ஆசிரியனுக்கும் மாணவனுக்குமுள்ள பற்று - ஸம்பந்தமானது தந்தைக்கு மகனுக்குமுள்ளது போன்றதாகும். ஆசிரியனிடத்து மாணவனுக்குப்-பக்தி, விச்வாஸம், அன்பும், நேசமும், இப்படிகளும் இல்லாவிடில் அவனுக்கு ஆத்மஞான முண்டாவதில்லை. எந்த "குருசிஷ்ய" ரிடத்து மேற்சொன்ன குணங்கள் பொருந்தியிருக்கின்றனவோ அங்குமட்டுந்தான் உண்மைஞானம் விளங்கும்; அங்கிருந்து மட்டுமே மஹாஞானிகளுண்டாகின்றார்கள். இந்த-உயர்ந்த-ஏற்பாடுகளில்லாத பிறநாடுகளில் ஆசிரியர் ஒரு வெறும் ப்ரஸங்கிப்பவரைப்போலிருந்துகொண்டு தனக்குத்

‡ ஸ்ரீபாகவதம் 11வது ஸ்கந்தம் அவதூதரது 24 குருக்கன்மார் என்ற பாகத்தைப்பார்க்க!

கூலியை விரும்பி வேலைசெய்கின்றார்கள். மாணவன் அவர்கள் விரும்பிய கூலியைக்கொடுத்து அவர்கள் சொல்வதை யெல்லாத் தனது மண்டை (மூளை)யில் நிறைத்துக்கொள்கின்றான். பிறகு முடிவில் இருவரும் பிரிந்து அவரவர் வேலையை நோக்கிப்போய் விடுகின்றார்கள். இவற்றால் ஆத்மஞானமுண்டாவதற்கு இடமே யின்றிப் போய்விடுகின்றது. ஒழுங்காக உபதேசிக்கு மாசிரியனு மில்லை; அதன் முறைப்படி பெற்றுக்கொள்ளும் மாணவனு மில்லை; கடவுளிடத்துப்பேரன்பு செலுத்துவதை அவர்கள் தங்களுக்குள்ள பலவேலைகளைப்போல (ஸாதாரணமான) ஒருவேலையாகவே எண்ணுகின்றார்கள். அது பணத்தினால் கிடைத்துவிடக் கூடியதென்று அவர்கள் பிழைபடக் கருதுகின்றார்கள். மெய்ப்பொருளறிவும் (=பரமார்த்தஞானமும்), கடவுளிடத்துப் பேரன்பும் (ஈச்வரபக்தியும்) இவ்வளவு எளிதில் கிட்டுவதாயிருந்தால் அடைந்துவிடலாமென்ற விருப்பத்தோடுகூட யானெப்பொழுதுங் கடவுளை வேண்டுகின்றேன்! ஆனால் எந்தத்துரதிருஷ்டத்தினாலோ அஃது அவ்வளவு எளிதிற்கிட்டுவதாகத் தோன்றவில்லை.

மிக உயர்ந்த-கேடற்ற-தான இந்த ஆத்மஞானமானது விலைக்குக்கிடைப்பதில்லை; புஸ்தகங்களிலிருந்து வருவதில்லை; காட்டிலுள்ள எல்லாப்பொருள்களையு மாராய்ந்து நோக்கினும்-எங்கெல்லாந்தேடினும்-அதையடைய முடிவதில்லை; உங்களுக்குமனந்தெளிவெய்தி நல்லாசிரியரை - சத்குருவைக் - கண்டுபிடிக்கும் வரையில் அதனையடைய முடியாது. அவ்வாறு நல்லாசிரியரைக் கண்டுவிட்டால் உடனே அவரை ஸாஷ்டாங்கமாய் வணங்க வேண்டும்; அவரை அளவற்ற பேரன்புடன் நேசிக்கவேண்டும்; அவரிடத்து உனது குறைகளை யெல்லாம் ஒன்றுமொளிக்காது, உள்ளதுள்ளபடியே வெளியிட்டுச் சொல்லவேண்டும்; அவரைக் கடவுளாகவே கருதவும் வேண்டும். இவ்வண்ணம் மெய்ப்பொருளையறிய மிகுந்த ஆவலோடும் அன்போடுங்கூடி ஞானோபதேசத்தை வேண்டிக் குருவினிடத்து வருகிறவனுக்குக் கடவுளே அக்குருவடிவத்திற்றோன்றி அவர் வாயிலாக மெய்ப்பொருளான "ஆத்மஞானோபதேசத்தை நன்குவிளக்கியருள்கின்றார்.

## ஏழைப்பையன்.

சுந்தரேசனுக்கு வயது ஆறு; இன்னும் நன்றாக நடக்கத் தெரியாது. சதாவண்டிகளிலும், வேலைக்காரியின் இடுப்பிலும் இருக்கிறவனுக்கு எவ்வளவு சீக்கிரமாக நடையில் பழக்கம் ஏற்படும்? ஆயினும், அவனை எல்லாரும் முதலியார் என்றே கூப்பிடுவார்கள். அவன் ஒரு பிரபுவின் வீட்டுப்பிள்ளையல்லவா? ராய்பகதூர் சோமசுந்தர முதலியாரின் குமாரன். தலையிலே சரிகைக் குல்லாய்; காலில் மேல்நாட்டுப் பாதரக்ஷைகள். பையன் சோமன் கட்டி அறியான். அதனால் சிலர் துரையென்றும், பலர் முதலியார் என்றும் சொல்லுவார்கள். அவன் நாகரீக நடையிலே பழகுவதற்கு, ஒரு சட்டைக்கார ஸ்திரீ அவனுக்கு ஆயாளாக அமர்த்தப்பட்டிருந்தாள். "அங்குச்செல்லுதல் கூடாது, இங்குச் செல்லுதல் அசௌகரியம், வீதியில் ஓடுதல் தவறு, மண்ணைத்தொட்டு விளையாடுதல் கூடாது, நடக்கப்போதல் கூடாது" என்று அவள் ஓயாமல் அவனுக்குச் சொல்லிக்கொண்டிருப்பாள். ஆயாள் தொந்தரவும், நிர்ப்பந்தங்களும் பையனுக்கு அருவருப்பை உண்டாக்கின. அவற்றை அவனும் சகிக்கமுடியவில்லை. "நானோ நான் அப்பாவைப்போல பெரியவனாக இருந்தால் இந்த ஆயாள் சொற்படி கேட்கவேண்டியதில்லையே என்று நினைப்பான். இந்தக் குழந்தைப் பிராயம் ஸ்வதந்திரமில்லாத ஜீவியம் அவனுக்குப் பிடிக்கவில்லை.

மற்றக் குழந்தைகளைப்போல அவனுக்கும் ஒரு தாயுண்டு. சுந்தரேசன் தாயார் மிகவும் பாக்யம்; அழகுடையவள்; பட்டுப் புடவைகள் தாம் கட்டுவாள். "பார்ஸி" வகுப்பு ஸ்திரீகளைப்போல உடுத்திக்கொள்வாள். பையன் காலையில் ஒருதரம் மாலையில் ஒருதரந்தான் தாயாரைப் பார்க்கமுடியும். காலையில் அவன் தூங்குகையில், அவள் வந்து அவனுக்கு ஒரு முத்தங்கொடுத்து எழுப்புவாள். அவன் சரியாக விழித்துக்கொண்டு தாயைக் கட்டிக்கொள்ளக் கைகளைத் தூக்குவதற்குமுன், அவள் போய்விடுவாள். என்ன செய்வாள்? பாபம்! அவளுக்கு ஓழிவேயில்லை. இரண்டொரு நிமிஷங்கள் தாம் குழந்தையைப் பார்க்கமுடியும். பகல் முழுதும் எவ்வளவோ வேலை. வீட்டுவேலையன்று; அதற்கு வேண்டிய பரிசாரகர்கள் இருக்கிறார்கள். வெளிவேலை; அவள் செல்லும் இடங்களுக்கெல்லாம் பையனைக் கூட்டிக்கொண்டு

போதல் பிரபுக்களுக்கு அழகன்று - அநாகரிகம்; தையற்கடை, ஜவுளிக்கடை, உயர்ந்த சாப்பாட்டுக்கடை, சங்கங்கள் முதலிய இடங்களில் குழந்தைகள் செல்லுதல் கூடாது. இரவில் நாடகம் பார்க்கப்போகும் சமயம் குழந்தைகளுக்கு நித்திரைக்காலமல்லவா? அங்கும் கூட்டிக்கொண்டு போகிறதில்லை. மேல்நாட்டு ஸ்திரீகளைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பலவிருக்க, நமது ஸ்திரீகள் அவர்களது ஆசாரங்களை மாத்திரம் கைப்பற்றிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் குழந்தைகளுக்குப் பால்கொடுக்கிற வழக்கமில்லை. யந்திரத்தைப்போல குறிப்பிட்ட நேரத்தில் தான் குழந்தைகளைப் பார்ப்பார்கள். அந்த வழக்கங்கள் நமது சந்திரேசன் தாயாரைப் பற்றிக்கொண்டன.

இக்காரணங்கள் பற்றி சந்திரேசனுக்கு, தெருவில் ஆயாவில்லாமல், யதேச்சையாக விளையாடிக்கொண்டிருக்கும் சிறு பிள்ளைகளின் அந்தஸ்து மேன்மையாகத் தோன்றிற்று. உலாவப் போகும் இடத்தில், மிகவும் ஏழையான தாய் ஒருத்தி தரையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ தையல் வேலை செய்துகொண்டிருந்தாள்; அவளுடைய மகன், ஐந்து வயதுடைய ஒரு பையன்; ஒரு சாமான்கூட இல்லாமல், தரைமீது தனியாக விளையாடிக்கொண்டிருந்தான். நமது சந்திரேசன் இவர்களைக் கண்டுவிட்டான். ஆஹா! தன் இஷ்டப்படி மண்ணில் உட்கார்ந்துகொண்டும், பட்டாக்கள் பின்னே ஓடிக்கொண்டும், காரணமில்லாமல் கத்திக்கொண்டும் விளையாடும் பாக்கியம் இப்பையனுக்குக் கிடைத்திருக்கிறது. அதோ ஒரு காய்ந்துபோன அப்பத்தைக் கையில் வைத்துக்கொண்டு என்ன ஆவலோடு தின்கிறான்? காய்ந்த அப்பம் ருசியாயிருக்குமோ என்ன? அந்த அப்பத்தில் ஒரு துண்டு கிடைத்தாலும் போதும், என நினைப்பான். ஒரு வாய் அப்பத்திற்காகத் தன் விளையாட்டுப் பண்டங்கள் எல்லாவற்றையும் கேட்டாலும், கொடுத்துவிடச் சித்தமாயிருந்தான்.

இங்ஙனமிருக்க, ஒரு தாடிக்காரன் அவ்வெளிய பையன் அருகில் சென்றான். பையனும் "அதோ அப்பா" எனச் சந்தோஷக் கூக்குரலிட்டான். உடனே தாடிக்காரன் தனது முரட்டுக் கைகளால் சிறுவனைத் தூக்கி, உச்சிமோந்து, கீழேவிட்டுவிட்டான். அப்போது "என்ன அதிர்ஷ்டம் இந்தப் பையனுக்கு" என்று சந்திரேசன் எண்ணித் துக்கமடைந்தான். தன்னுடைய தகப்ப

ளே, தன்னை ஞாயிற்றுக்கிழமைதினம் சாப்பாட்டு வேளையில் நெற்றியில் முத்தமிடுவதும், தோளில் சந்தோஷமாகத் தட்டுவதும் வழக்கம்; அதுவும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றது. சோமசுந்தர முதலியார் ஒரு பெரியவியாபாரி. அவர் அடிக்கடி வெளி ஊர்களுக்குச் செல்லும்படி நேரிடும்.

சந்திரசேகனுக்கு அநேக விளையாட்டுப் பண்டங்களிருந்தும், அவற்றில் அவனுக்குப் பிரியமே கிடையாது. ஏனெனின் அவற்றை அவன் சுயமாக உபயோகிக்கக்கூடிய நிலைமையில் அவை இரா. சிலவற்றை அவனால் தூக்கமுடியாது. வேறு சில மிகவும் நுட்பமானவை. எல்லாம் பொதுவில் விலையுயர்ந்தவை. ஒருநாள் அவனுக்கு ஒரு விளையாட்டுக் கப்பல் வேண்டுமென்றும், அதனைத் தானாகவே தொட்டி ஜலத்தில் மிதக்கவிடவேண்டுமென்றும் தன் தகப்பனிடம் சொன்னான். மறுநாள், 40 இராத்தல் கனமுள்ள ஒரு ருத்திரக்கப்பல் வாங்கித் தயாராய்விட்டது. வேலைக்காரி பையனை எடுத்துக்கொண்டாள். வேலைக்காரன் கப்பலை எடுத்துக் கொண்டான்; தொட்டியினிடம் வந்த உடனே, வேலைக்காரன் கப்பலுக்குச் சாவி கொடுத்து, தண்ணீரின்மேல் விட்டுவிட்டான். ஒன்றையும் கையினால் தொடாமல், கண்ணாலே பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது சந்திரசேகன் வேலை. ஐயோ! பாவம். இவ்வளவு பெரிய கப்பல் அவனுக்கு எதற்கு? ஒரு காகிதக் கப்பல் செய்து கொடுத்தால் போதுமே! அவனே அதை எடுத்துக் கொண்டு போய் ஜலத்தின் மேல் மிதக்கவிட்டுச் சந்தோஷ மடைவானே!

சந்தோஷமாக விளையாடுவதற்குப் பண்டங்கள் அவசியமில்லை. சந்திரசேகன் வீட்டிற்கு எதிரே, தெருவில், அரை, அரையாகச் சில கோடுகள் கிழித்து, சில ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் சில் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளையும், ஒரு காலால் நொண்டி, நொண்டி நடந்துகொண்டு ஒரு சில்லைத் தள்ளுகிறான். எல்லோரும் சிரிக்கிறார்கள்; சந்தடி செய்கிறார்கள், சந்தோஷமாக விளையாடுகிறார்கள். அந்தச் சப்தம் மெத்தை மீது தனதறையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் சந்திரசேகன் செவிகளில் விழுந்தது; உடனே ஜன்னலால் தலையை நீட்டி, தெருவில் "பார்த்து நான் ஏன் இவர்களோடு சேர்ந்து விளையாடுதல் கூடாது" என்று எண்ணுவான்.

ஏன் விளையாடக்கூடாது? தம்பி! நீ. பணக்காரன் மகன். நாகரீகப்பித்தேறினவன். இல்லாடுதல் முதலிய விளையாட்டுகளெல்லாம் உன்னைப்போன்ற பணக்காரப் பிள்ளைகளுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆமாம், பணம் பத்தும் செய்யும், பணந்தான் ராஜா என்கிறார்களே! தன் இஷ்டப்படி நடப்பவனல்லவோ ராஜா? ராஜா யாருக்கு அடங்கியிருக்கவேண்டும்? பணம் ராஜா என்றது தப்பிதம். பணத்தினால் சந்தோஷமும், சுகமும், ஸ்வதந்திரமும் இல்லாவிடில் இவ்வளவு சிரமப்பட்டு அதனைத் தேடுவானேன்?

சோமசுந்தர முதலியார் வியாபாரத்தில் நஷ்டமடைந்து விட்டார். கடன்காரர்களெல்லாம் அவருடைய சொத்துக்களை ஏலம் போட்டு எடுத்துக்கொண்டார்கள். பத்திரமில்லாத கடன்காரர்கள் ஏமாந்துபோனார்கள். இருந்தாலும் அவர்கள் முதலியாரைத் தினந்தோறும் கண்டு தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைப் பற்றிப் பேசாமல் போவதில்லை. ஒருநாள் கடன்காரர்கள் தொந்தரவு சகிக்க முடியாததாலும், அவர்கள் முன்னிலையில் அவர்கள் ஊரில் இருக்கப் பிரியம் இல்லாததாலும், முதலியார் குடும்பத்தோடு பட்டணம் விட்டு புதுவைக்கு வந்துவிட்டார். ஒருசிறிய தெருவில், ஒருசிறு வீடு வாடகைக்குப் பேசி அதனில் வசித்து வந்தார்.

இங்ஙனம் இடம் மாறினதற்குக் காரணம் தெரியாத சுந்தரேசன் ஆச்சரியமடைந்தான். ஆயாளைக் காணவில்லை; தன் தாய் சதா தன்னோடு இருக்கிறதைப்பார்த்து, சந்தோஷமடைந்து அவன் சொன்னதாவது. "ஏன் அம்மா இங்கு வந்தோம்! ஆயா எங்கே? இந்த வீடு சின்னதாக இருக்கிறதே! நீ எப்போதும் என்னோடு இருக்கின்றாயே. இந்த அதிர்ஷ்டம் எனக்கு எங்ஙனம் வந்தது?

தாய் மறுமொழி சொல்லுகிறாள்:—

"மகனே! நமது பணமெல்லாம் போய்விட்டது. ஆயாளுக்கு எங்கிருந்து சம்பளம் கொடுக்கிறது? அதனால் அவளையும், மற்ற வேலைக்காரர்களையும் நீக்கிவிட்டோம். நானும் இனி வெளியே போகமாட்டேன்; நானே சமையல் செய்து, உனக்கு நானே சாதம் படைப்பேன். உன்னோடு எப்போதும் இருப்பேன். நாம் ஏழைகளாய் விட்டோம்."

“அன்னையா? அம்மா” என்றான் சுந்தரேசன். “ஆயாவொழிந்தாள், தாய் எப்போதும் என்னுடனிருக்கிறாள், நான் என் இஷ்டப்படி விளையாடலாம்! என்ன பாக்கியம்? இன்னமே, எப்பொதும், நாம் ஏழைகளாகவே இருப்போம் அம்மா.”

ரங்கூ N. சுப்பிரமணிய அய்யர்.

## கர்ணன்.

(முன்தொடர்ச்சி)

பாண்டவர்களும் குந்திதேவியும் உயிரோடிருக்குஞ் செய்தியை யுணர்ந்த பீஷ்மர், விதுரர், துரோணர் முதலியோர் பேரானந்த மெய்தி அவர்களை அஸ்தினாபுரிக்குவருவித்து மீண்டும் யுதிட்டிரரை இளவரசாக்கினர்.

அதைக்கண்ட துரியோதனன் மீண்டும் அழுக்காறெய்தினன். அதையுணர்ந்த திருதராட்டிரன் கட்டளையினால் பாண்டவர்கள் தாயோடும், திரௌபதியோடும் தங்கட்கு விளைதருந் துயரெலாங் களைதரும்பொருட்டு விண்ணகத்திருந்து மண்ணகத்து கண்ணபிரானோடும் முன்னே நகரமாயிருந்து அழிந்து அப்பொழுது பெருங் காடாயிருக்கும் காண்டவபிரத்தம் என்னும் இடத்தை யணுகினர். அருட்கடலாகிய கண்ணபிரான் விருப்பின்படி இந்திரன் அப்பெருமானது திருமுன்வந்து வணங்கி அவ்விறைவனது விழைவிற்படி விச்சுவகர்மனை அழைத்து அவனால் பூமியினுலங்குக் காணற்கரிய பெரியதோராழகிய நகரமமைப்பித்து அதற்கு இந்திரப்பிரத்தம் என்னும் பெயரையிட்டனன். பிறகு பாண்டவர்கள் கண்ணபிரானோடு அந்நகரை யடைந்து யுதிட்டிரருக்கு எல்லா வைபவங்களோடு முடி சூட்டப்பட்டது.

பின்னர் பீமன் முதலிய தம்பியர் நால்வரும் திக்குவிஜயஞ் செய்து ஈட்டிய பொருளைக்கொண்டு தருமபுத்திரர் ராஜசூய யாகத்தைச்செய்து முடித்தனர். அவ்வியாகத்தை முடித்ததனால் யுதிட்டிரருக்குச் சம்ராட் என்னும் பட்டம் சூட்டப்பட்டது.

அப்போது அங்கு வரவழைக்கப்பட்டிருந்த துரியோதனன் மனம் பொறாமல் அஸ்தினாபுரியைச் சார்ந்தவுடன் சகுனி முதலியவரோடு ஆய்ந்து சகுனியின் சொற்படி பாண்டவர்களை அஸ்தினாபுரிக்குவருவித்துச் சகுனியைக்கொண்டுயுதிட்டிரருடன்சூதாடு

வித்து அவ்வாட்டத்தில் அவர்களுடைய ராச்சிய முதலிய எல்லா வற்றையும் கவர்ந்து, அவர்களையும் அடிமைகளாக்கினான்.

திரௌபதி மீண்டுஞ் சகுனியோடு சூதாடிப் பாண்டவர்களை அடிமைத்தனத்தினின்று மீட்டனள்.

பின்பு பாண்டவர்கள் துரியோதனன் முதலியவர்களைக் கொல்லாமல் விடோம் என்றும், திரௌபதி துரியோதனன் பேரில் பீமன் கையினால் மடிந்தபின்னன்றி என்கூந்தலை முடியேன் என்று சபதஞ்செய்தனர். திருதராட்டிரன் அச்சபத மொழிகளைக்கேட்டு மிகவும் அஞ்சி நடுங்கி பீஷ்மர், விதுரர் முதலியவர்களோடு ஆய்ந்து பாண்டவர்கள் பன்னிரண்டு வருடங் காட்டில் வசித்துப் பிறகு ஒருவருடம் அஞ்ஞாதவாசம் செய்து வரின்மீட்டும் அவர்களுடைய ராச்சியத்தை அவர்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்தனன். பாண்டவர்கள் தங்கள் தாயாகிய குந்திதேவியை அஸ்தினபுரத்தில் விதுரர் மாளிகையில் இருத்தித் திரௌபதியோடு சென்று அவ்வண்ணமே பன்னிரண்டு வருடம் காட்டில் உறைந்து ஒருவருடம் விராடநகரில் ஒருவரும் உணராமல் இருந்து அப்பதின்மூன்று வருடங்கள் முடிந்ததும் வெளிப்பட்டனர்.

பிறகு விராடன் பாண்டவர்களை உபசரித்துத் தன் பெண்ணாகிய உத்தரையை அருச்சுனன் மைந்தனாகிய அபிமன்னனுக்கு மணம் புரிவித்து அவர்களை மகிழ்வித்தான். அவர்கள் வெளிப்பட்டதை யுணர்ந்த பலநாட்டரசர்களும் ஸ்ரீ கண்ணன் பலராமன் முதலியோர்களும் அவர்களிடம் வந்து அவர்களுக்குப் பல உபசார மொழிகளைக் கூறினார்கள். பிறகு அனைவரும் கண்ணனோடிருந்து பாண்டவர்கள் தங்கள் நாட்டைத் துரியோதனனிடமிருந்து பெறுதற்குரிய வகையைப்பற்றி யோசித்து முடிவில் கண்ணன் சொல்லியபடி உலூக முனிவனைத் துரியோதனன் பால் தூதாக அனுப்பவேண்டுமென நிச்சயித்தார்கள். பாண்டவர்களைக் காணவந்த அவ்வரசர்களும் ஸ்ரீ கண்ணன் முதலியவர்களும் தத்தம் பட்டணங்களுக்குச் சென்றார்கள்.

தருமர் கண்ணன் சொற்படி உலூக முனிவனைத் தூதாக அனுப்பினார். அம்முனிவன் அஸ்தினாப்புரிக்குச் சென்று பாண்டவர்கருத்தினைத் துரியோதனனுக்குத் தெரிவித்து அவர்கள்நாட்டை அவர்களுக்குக் கொடுக்கும்படி கூறினன். அதைக் கேட்ட விதுரர்

முதலியவர்களும் அவ்வாறு செய்தலே நலமென்று துரியோதனனுக்குக் கூறினார்கள். துரியோதனன் அவர்கள் சொல்லை எல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் பாண்டவர்களுக்கு நாடுகொடேன் என்று கூறிவிட்டனன்.

அதைக்கேட்ட பீஷ்மர் பாண்டவர்களுக்கு அவர்களுக் குரிய நாட்டை முற்கூறியபடி கொடாமல் அவர்களோடு போர் புரியக் கருதுதல் தகுதி யன்று. போரில் அவர்களை எதிர்க்க வல்லார் நம்மில் யாரிருக்கின்றார்கள்? என்று கூறினார்.

அதைக்கேட்ட கர்ணன்:—

"முன்னமே யுகிர்முந்தவெம் புலியென
    மூரணுறு முனிமைந்தன்
றன்னை மற்றவனிடத்து நீ கற்றவெந்
    சாத்திரன்வென் றமையல்லால்
என்ன சேவகன் கொண்டு நீ யானையு
    மிகழ்துரைப் பதுவென்று
கன்ன னுந்திறற் கங்கையன் றன்னொடு
    கன்னிவந் துரைசெய்தான்"

என்று பீஷ்மனை நோக்கி இகழ்ந்து கூறினான்.

அதைக்கேட்ட பீஷ்மர்

"தாம வெங்கணைத் தொன்றிய தோகையுந்
    தொடையல் ஆட்டிய நாளில்
நாம வெஞ்சிலை நாணெடுத் தனையடா
    நானோடும் போர்செய்தாய்
தாம வெண்குடை நிருபனை யந்தர
    சரிதர்கொண் டேகாமல்
வீமன் வெஞ்சிறை மீட்டநாளினுந்திறல்
    வினைபுரி முனைவென்றாய்."

"ஒருதன் மாநெடுந் தேரினை யறிவுற
    வுத்தரன் விரைந்தூர
நெருந லானிரை யவர்க்கரு முகத்திடை
    நின்றனை கெடும்போது
மருந ரூவுமிழ்ந்த மாயவன் தேர்விட
    மலையுநாள் வயவாளி
வெருநர் மேல்விடா விசயனை நீயலால்
    வெல்லவல் லவருண்டே"

என்றிவ்வணம் இழித்துக் கூறினர். அவர்கள் வார்த்தைகளை யெல்லாங் கேட்டுக் கொண்டிருந்த துரியோதனன் கர்ணனிடத்து மிகவு மனக்களிப்பினைக்காட்டி, பாண்டவர்கள் தூதனுப்பத் தன் பால்வந்த முனிவரை அவமதித்து நோக்கிப் "பஞ்சைகளாகிய பாண்டவர்களுக்குத் தூதாகவந்த முனிவரே! ஊராதரவு மின்றிக் காடோடிகளாய்த் திரிந்த அப்பஞ்சைகளுக்கு நான் சிறிதும் அஞ்சுகிறவனல்லேன். அவர்கள் இதுகாறும் அலைந்து திரிந்து கொண்டிருந்த காடுதான் அவர்களுக்கு உரியது. ஒரு மேன்மையும் இல்லாத அவர்களுக்கு நாட்டாட்சி உரியதன்று. அஃது எங்களுக்கே யுரியதாகும்" என்றனன். அம்முனிவனும் அதனைக் கேட்டு மறுமொழி யொன்றுங் கூறாமல் துரியோதனன் பால் விடை பெற்றுச் சென்று யுதிஷ்டிரருக்கு அதனைத் தெரிவித்தனன்.

(வரும்)

C. R. கோவிந்தராஜ முதலியார்,
பண்டிதர், பச்சையப்பன் காலேஜ்,
சென்னை.

## சுகாதாரம்.

(முன்தொடர்ச்சி)

### வாசஸ்தலங்களுக்குள் சுத்தமான காற்று.

முன் கூறியிருப்பதுபோல் நாம் சுவாசிக்கும் காற்றில் ஓயாமல் அநேகவிதமான அசுத்தங்களும் விஷங்களுஞ் சேர்ந்து கொண்டே யிருக்கின்றன. எவ்விடத்திலுமுள்ள காற்றில் 10,000-ல் 4-பங்கு விஷமுள்ள கரி அமிலவாய்வு சேர்ந்திருக்கின்றது. ஆனால், இத்தக்காற்றை ஒரு மனிதன் சுவாசத்தினால் உட்கொண்டு பின்பு அதை வெளியே விடும்பொழுது இந்தச் சுவாசக் காற்றைப் பரீக்ஷித்துப்பார்த்தால் அதில் கரி அமிலவாய்வு 10,000-ல் 400-பங்காகின்றது; அஃதாவது 100-மடங்கு அது அதிகப்படுகின்றது. மேலும் ஒரு பெரிய ஆள் ஒரு மணிநேரத்தில் ½-கன அடி அளவுள்ள அல்லது 3½-ரூபாய் நிறையுள்ள கரி அமிலவாய்வைச் சுவாசத்தினால் வெளியே விடுகிறான். இது தவிரவும், வேர்வையிலிருந்தும் அதிகமான கரி அமிலவாய்வு

புறப்படும். இவ்விதமாய்ச் சுத்த ஆகாயத்தில் கரி அமிலவாய்வு 10,000-ல் 4-பங்கிருக்க, ஜனக்கூட்டங்களின் வீதிகளிலும் ஜனங்கள் நெருக்கமாய் நித்திரை பண்ணுகிற அறைகளிலும் உள்ள காற்றில் கரி அமிலவாய்வு 10,000-ல் 30-50-சில வேளைகளில் 70-பங்கு வரைக்குங் காணப்படுகின்றது. நாம் சுவாசிக்கும் காற்றில் கரி அமிலவாய்வு 10,000-ல் 10-பங்குக்கு அதிகப்பட்டாலும் சுகத்திற்கு இடையூறுண்டாகும். கரி அமிலவாய்வைத் தவிரவும், வளர்ந்த ஒரு ஆளுடைய வேர்வையிலிருந்தும் சுவாசத்திலிருந்தும் ஒரு நாளொன்றுக்கு 25-முதல் 40-அவுன்ஸ் வரையுள்ள நீராவியும், 30-முதல் 50-கிரெயின் வரையுள்ள அசுத்த தேகக்கழிவுகளும் வெளியே புறப்பட்டு ஆகாயத்தைக் கெடுக்கின்றன.

ஒரு மனிதனுடைய தேகத்திலிருந்து 24-மணி நேரத்தில் இவ்வளவு ஏராளமான அசுத்தமும் விஷமுமுள்ள கழிவுகள் புறப்பட்டு ஆகாயத்தைக் கெடுக்கிறபடியால் போதுமான ஜன்னல்களில்லாமலாவது அல்லது இருக்கிற ஜன்னல்களும் கதவும் அடைக்கப்பட்டாவது இருக்கிற அறைகளுக்குள் அநேக ஆட்கள் நித்திரை செய்கிறபொழுது அங்குள்ள காற்று வரவர தேகக்கழிவுவிஷங்களால் நிறைந்துபோம். ஆகையால் மறுநாள் உதயம் ஒருவன் வெளியிலிருந்து கதவைத்திறந்துகொண்டு அவ்வறைகளுக்குள் பிரவேசித்தால் அங்குள்ள நாற்றத்தையும் அதனால் உண்டாகும் சுவாசத்திணைப்பையும் சகிக்கமாட்டான். இப்படியிருந்தும் அவ்வறைகளுக்குள் வாசஞ்செய்கிற ஆட்களுடைய நாசிப்புலன் வழக்கமாய் துர்க்கந்தத்தை முகர்கிறதினால் முற்றிலும் மழுங்கிப்போகவே அவர்களுக்கு நாற்றம் ஒன்றும் தெரியமாட்டாது. ஆயினும் இப்படிப்பட்டவர்களுடைய சுகம் வரவரக் கெட்டுப்போகிறதற்குச் சந்தேகமில்லை.

முன்சொன்னபடி நெருப்பு எரிகிறதினாலும், கரி அமிலவாய்வும் பின்னும் சில விஷவாய்வுகளும் ஏராளமாயுண்டாகி ஆகாயத்தைக் கெடுக்கின்றன. காற்றில்லாமல் நெருப்பு எரியாது; ஒரு பவுன் நிறையுள்ள காய்ந்த விறகு எரிந்து போகிறதற்கு 120-கன அடி காற்று செலவழியும்; அதனால் 22-கன அடி கரி அமிலவாய்வு உண்டாகும். பெரிய திரியுள்ள ஒரு விளக்கு ஒருமணி

நேரம் எரிய 154-கிரெயின் எண்ணெய் வேண்டும். அதற்கு 3-கன அடி காற்று செலவழியும். அதனால் ¾-கன அடி கரி அமில வாயு உண்டாகும். ஒரு பவுன் எண்ணெய் எரிய 150-கன அடி காற்று வேண்டும். அதனால் 24-கன அடி கரி அமிலவாயு உண்டாகும். மேலும் ஜலதாரை அல்லது சாக்கடை முதலான இடங்களிலிருந்தும் பலவகை விஷவாய்வுகளுண்டாகி ஆகாயத்தைக் கெடுக்கும். இரண்டுபடி சாக்கடைத் தண்ணீரிலிருந்து ஒரு மணிநேரத்தில் ஏறக்குறைய 2-கன அடியுள்ள பல அசுத்த வாய்வுகள் புறப்படும்.

மேலேகண்ட பிரகாரமாகப் பலவழிகளால் ஆகாயத்தில் ஓயாமல் அநேக விஷவாய்வுகள் சேர்ந்துகொண்டே யிருக்கிறபடியால் அது எவ்வகையாலாவது எப்பொழுதும் சுத்தமாக்கப்பட்டு வாராவிட்டால் அதிசீக்கிரத்தில் அது ஜீவஜெந்துக்களின் சுகத்திற்கும் பிராணனுக்கும் சேதங்களை யுண்டுபண்ணும். ஆகையால் ஜீவகாருண்ணிய கடவுள் ஓயாமலுண்டாகிற விஷவாய்வுகளின் தொகைகளை வெகுவாய்க் குறைக்கும்படி இயல்பில் அமைத்திருக்கிற ஏற்பாடுகளை முதலாவது கவனிப்போமாக.

(1) பல இடங்களில் ஓயாமலுண்டாகிற விஷவாய்வுகள் அவை உற்பத்தியாகிற இடங்களிலேயே தங்குமானால் அவ்விடங்களிலிருக்கிறவர்களுக்கு அவை பெரியமோசங்களைச் செய்துவிடும். ஆகையால் ஒரு பானைத்தண்ணீரில் கொஞ்சம் பாலை விட்டால் அது உடனே தண்ணீரெங்கும் பாவிப்போய் விடுகிறது போல, பலவிடங்களில் உண்டாகிறவிஷவாய்வுகள் அந்தந்த இடங்களிலேயே நின்றுவிடாமல் மிகவும் விரைவாய்ப் பரவி ஆகாயமெங்கும் சிதறிப்போகின்றன.

(2) காற்றினாலும் விஷவாய்வுகள் நாலா திக்குகளில் சிதறடிக்கப்படுகின்றன. இவ்விரண்டு வகைகளால் விஷவாய்வுகளுடைய தொகை மிகவும் தணிக்கப்படுகின்றது.

(3) மழை பெய்யும்பொழுது ஆகாயத்தில் கலந்திருக்கிற பல விஷவாய்வுகள் மழைத் தண்ணீரோடு கலந்து பின்பு அதன் வழியாய்ப் பூமிக்குள் இறங்கி மறைந்துபோகின்றன.

(4) உலகத்திலுள்ள சிலபொருள்கள் அநேக விஷவாய்வுகளை அழித்துப்போடுகின்றன. திருஷ்டாந்தமாக முன்னே

சொல்லியிருக்கிறபடி புல் பூண்டு விருட்சங்கள் விஷமுள்ள கரி அமிலவாய்வையும் மூத்திர முதலானவைகளிலுண்டாகிற நவ சாரவாய்வையும் ஏராளமாய் உட்கொண்டு அவைகளை அழித்து விட்டு நமக்கு நன்மையான பிராணவாய்வை வெளியே விடுகின்றன.

பொதுவாய் எங்குமுள்ள ஆகாயம் சுத்தமாக்கப்படுவதற்கு இயல்பில் அமைக்கப்பட்டிருக்கிற ஏற்பாடுகளைக் கவனித்தோம். ஆனால் நமது வாசஸ்தலங்களுக்குள் ஓயாமல் பலகாரணங்களினால் விஷமாக்கப்படுகின்ற ஆகாயம் சுத்தமாக்கப்படுவதற்கு இயல்பின் ஏற்பாடுகள் போதாது. நாம் அதைச் சுத்தமாக்குவதற்குப் பலபிரயத்தனங்களைச் செய்யவேண்டும்.

## பிதுர்வாக்கிய பரிபாலனம்.

### அங்கம்—1.

### காட்சி—2.

**இடம்:—அயோத்தியில் ஒரு தெரு**

மாதவன் கோவிந்தன் நாராயணன் என்னும் மூன்று வாலிபர்கள் பேசிக்கொண்டே போகிறார்கள்.

மாதவன்:—நாராயணா! நாளைக்கு இந்நேரமெல்லாம் இந்த அயோத்தி எப்படியிருக்கும் தெரியுமா? ஒரு புது நகரம் போலல்லவா விளங்கப்போகிறது. இப்பொழுதே பார்! கொடிகளும் தோரணங்களும் பூரணகும்பங்களும் பதாகைகளும் பகரமுடியாத புதுமைகளும் அதிமனோஹரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

நாராயணன்:—அடே நீ ராஜவீதிகளைப் பார்க்கவில்லையே! அங்கெல்லாம் ஸ்ரீஇராமச்சந்திரருக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதென்று பறைசாற்றிய அன்றே அலங்கரிக்கத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் அங்கங்கே பார்த்தால் என்ன அலங்காரம் தெரியுமா? அடே என்ன சொல்லட்டும் நான்! அடா! தெருக்களும் மாடமாளிகைகளும் கண்ணைக் கவர்கின்றன

(மாதவனும் நாராயணனும் பேசிக்கொண்டேயிருக்கின்றார்கள்; கோவிந்தன் ஒரு பக்கம் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.)

மாதவன்:—(மெதுவாய்) நாமென்ன பேசிக்கொண்டுபோகிறோம்? கோவிந்தன் எங்கேயோ பார்த்துக்கொண்டே வருகிறான் பார். பைத்தியக்காரன் மாதிரி நடக்கின்றானே!

நாராயணன்:—அவனுக்கு ஒரு குறையுண்டுபாவம்! இந்தமாதிரி கொட்டு முழக்கு, குதூகலம், அலங்காரம், பாட்டுக்கச்சேரி இவ்வைபவங்களைக் காணும்போதெல்லாம் நமக்கு எப்போது கல்யாணமாகப்போகிறது, நாமெப்போது இவ்வைபவங்களையெல்லாம் அநுபவிப்போம் என்கிற நினைவு வந்து அவன் மனதில் குடிபுகுந்துவிடும். அப்பொழுது அவன் இப்படிப் பைத்தியக்காரன்போல் விழிப்பான்! அதை யொரு சமயம் கவனித்தேன். அந்த நிலையிலிருக்கிறான் போலிருக்கிறது இப்போது?

கோவிந்தன்:—(திரும்பிப்பார்த்து) என்னடா நாராயணா! உருட்டுகின்றாய் மேலும் கீழுமாக! அப்பாடா என்று இருக்கிறதோ பிழைப்பு! கல்யாணம் பண்ணிக்கொண்டபெருமைபோலிருக்கிறது! நாளைக்குப் பெண்சாதியிடம் உப்புக்கும் புளிக்கும் பிடுங்குப்படும்போது தெரியும் கல்யாணத்தின் சுகம்.

மாதவன்:—அவன் சொல்லுகிறான் என்று கோபித்துக்கொள்கிறாயே! நீ எங்கேயோ பார்த்துக்கொண்டு பைத்தியக்காரன் போல் நடந்தாயே? சும்மா பேசுவே நீ! கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டும்; பெண்சாதியும் பிள்ளையுமாக இருக்கவேண்டுமென்கிற எண்ணம் யாருக்கில்லை? எல்லாருக்குந்தான் உண்டு; பத்தைப்பெற்று பத்தைக் குழியில் போட்ட கிழவன்கூட கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறான். ஓடுகிற பாம்பை மிதிக்கிற காலம் உனக்கு, நீ அப்படி பெண்ணைக்கொள்ளக் கேட்கவேண்டுமா?

கோவிந்தன்:—ஏதடா மாதவா! நீகூட..............................
அதோ அங்கே பாரடா, கனி தன் வீட்டிலிருந்து குனிந்து

குனிந்து அங்குமிங்கும் பார்ப்பதையும் அவள் வீட்டு வாசலில் தோரணக்கால் நடுவதற்குக் கூலியாள் பாடிக்கொண்டு குழி தோண்டுவதையும். நான் அதைப்பார்த்துக்கொண்டே வந்தேன். பைத்தியக்காரனென்று என்னவோ உளறுகிறாய் நீ!

நாராயணன்:—எங்கேயடா கவனம் உனக்கு! கூனியின் அழகினை உனக்குக் கண்கள் செல்லவேண்டும்? வெகு விந்தை! கூனியையும் கூனி வீட்டையும்விட வேறெதுவும் உன் கண்ணுக்குப் படவில்லைபோலிருக்கிறது! வெகு அழகு! நகரமே புதுக்கரமாக விளங்குகிறதே! அலங்காரங்கள் கண்களைக் கவர்கின்றனவே! அதியற்புதமாகத் தோற்றவில்லையா இவை உன் கண்ணுக்கு?

கோவிந்தன்:—எல்லாந் தெரிகிறதடா! கூனி கோலை ஊன்றிக் கொண்டு இங்குமங்கும் ஓடுகிறாள்; நடுவேதோடு இன்னொருத்தியுடன் என்னமோ அவசர அவசரமாகப் பேசுகிறாள்; அதில் புத்திசென்றிருந்தது. அதனால்—

மாதவன்:—போடா! மதியீனி! கூனியையும் கூனி பேச்சையும் யாராவது கவனிப்பரோ? நகரமண்டப அலங்காரங்களையும் அரண்மனை அலங்காரங்களையும் ராஜாக்கள் வரும் அழகையும், கூடாரங்களின் அழகையும், யானை ஒட்டகம், குதிரை முதலியன வரும் வரிசையையும் சைனியங்களின் அமைப்பையும் பேரிகை முழக்கத்துடன் வரும் விருதுகளின் அழகையும் போய்ப் பார்ப்போம். வா? கல்யாணப் பித்தப்பிடித் தலையாதே வா போவோம்.

(போகிறார்கள்)

அங்கம்—1

காட்சி—3

இடம்:—மந்தரையின் வீடு.

[மந்தரை தன்வீட்டில் இருந்து மகிழ்ந்துகொண்டு அலங்காரங்களைப் பார்ப்பதும் தன் வேலைக்காரி சுந்தரியுடன் பேசுவதுமாக இருக்கிறாள்.]

மந்தரை:—(வேலைக்காரியை நோக்கி) அடியே! என்ன தடபுடல் படுகிறது பாரடி பட்டணம்! இராமனுக்குப் பட்டாபிஷேக

மானால் கைகேசி யம்மாளுக்கு என்ன சுதந்தர மிருக்கப் போகிறது? அந்த அம்மாளுக்குச் சுதந்தரமில்லையானால் நமக்கெங்கே சுகம்? நாமெல்லோரும் அடிமைதான் கௌசலைக்கும் சீதைக்கும்!

சங்:—அம்மா! அப்படி நடக்கப்பட்டவரா இராமர்! நல்ல பிள்ளையாச்சே! தெருவிலே யாராவது துக்கப்படக் கண்டாலும் மனமிரங்கி அம்மா, என்னவேணும், எங்கே போகணும், என்றுவிசாரிக்கப் பட்டவர்களாச்சே! கைகேசி யம்மாள் மனம் வேறுபட நடப்பார்களா? ஸம்ராஜ்யத்துக் கேற்ற பிள்ளையாச்சே! அப்படி வித்தியாசமாய் எண்ணவேண்டாம்.

மந்:—போடி பைத்தியக்காரி! ஐசுவரியம் வந்ததென்றால் பிறகு தன் தலை தெரியுமா? * இன்றைக்கு இராமன் இப்படி யிருக்கின்றான் என்று எண்ணாதே! பின்னாலே வேறு மாதிரியாய் மாறிவிடுவான். நீ யோசித்துப் பாரடி பைத்தியக்காரி! இராமன் ராஜாவாய்விட்டால், பரதன் அப்பால் பணிவிடைக்காரன்றான், அவன் அப்படியாய்விட்டால் கைகேயி அம்மாளுக்கு என்னடி நடக்கும்! கைகேசி யம்மாள் கதியப்படியானால் நாமெல்லாமெப்படிப் பிழைப்பது? தெரியாமலுளறுகிறாயே? யோசனையே கிடையாதுனக்கு! சீனடி! கோசலையினுடைய காரியமிது! அவள் என்ன பண்ணியிருக்கிறாள் தெரியுமோ உனக்கு—

(தலையை யசைத்து நீட்டினது போலப் பேசுகிறாள்)

பாரடி என்னை! பரதனும் சத்ருக்னனும் இப்போது எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் மாமன் வீட்டிற்குப் போயிருக்கிறார்களல்லவா? இதுதான் சமயமென்று கண்ட கௌஸலை ராஜாவை

---

விருத்தம்

* செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமும் சிறிதுபேணார்
சொல்வன அறிந்துசொல்லார் சுற்றமுந்துணையும் நோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென்றோரார்
வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்—
என்று கூறுவது நீ கேட்டதில்லையோ?

மயக்கித்தன் வசப்படுத்திக்கொண்டு காரியத்தை நிச்சயித்து விட்டாள். ராஜாவுக்கு எப்போதும் ஆழ்ந்த யோசனையே கிடையாது. பரதன் ஊரிலில்லாத சமயத்தில் ராமனுக்குப் பட்டங் கட்டலாமோ? ஊர் சிரிக்காதோ? இதிலேயே பார் ஏதோ தந்திர மிருப்பது தெரிகிறது.

கூ:—அப்படி யிராதென்று எண்ணுகின்றேன். பிறகு எப்படியோ? மனம் அடிக்கடி மாறுவதாயிருக்கிறது. கண்டதார் இதையெல்லாம்.

மந்:—அடி என்னடி நீ! ராமனாண்டாலென்ன ராக்ஷஸன் ஆண்டாலென்ன என்று நினைக்கிறாய் நீ! உனக்கு அறிவே கிடையாது. ஒன்றினால் துன்பம் வருமென்பது தெரிந்தும் சும்மா விருக்கலாமோ? வெள்ளம் வருவதற்கு முன்பு அணைபோடுவதல்லவா அழகு! வந்தபின் என்னசெய்ய முடியும்? நீ பேசாமலிரு. நான் இதற்குத் தக்கசூட்சி செய்கின்றேன் பார்! நாளைக்குப் பார் என் வேலையை!

(வரும்)

வரகவி-திரு-அ-சுப்பிரமண்ய பாரதி.

## யுத்தம்.

ஐரோப்பாக் கண்டத்தில் நடந்துவரும் யுத்தம் சீக்கிரம் முடிவு பெறுமென்று தெரியவில்லை. ருஷ்யாவில் நேர்ந்த கலகத்தினாலும், ஜெர்ம அரசரின் விபரீதச் செய்கைகளினாலும், யுத்தம் சீக்கிரத்தில் முடிவுபெறுவது தாமதமாகிவிட்டது. ருஷ்யாவில் ஜனநாயக ஆட்சி ஸ்திரப்பட்டு விட்டமையினாலும், ஜெர்மன அரசர் தமது ராஜரீகத்தை விட்டு விலகினமையினாலும், அமெரிக்கா நேசராஜாங்கத்தாரோடு சேர்ந்து கொண்டமையினாலும், சமீபகாலத்தில் யுத்தம் மிகு உக்ரமாக நடந்து சீக்கிரத்தில் நேசராஜாங்கத்தார் வெற்றிக்கொடி நாட்டுவார்களென்று தெரிகின்றது. ஜப்பானும், சைனாவும் யுத்தத்திற் சேர்ந்து நேசராஜாங்கத்தார்க்குப் பலிதமான உதவியுஞ்செய்து வருகின்றன. யுத்தத்தினால் உலகத்திற்கு நேர்ந்திருக்கும் கஷ்டம் சீக்கிரத்தில் முடிவுபெறுமாறு நாம் கடவுளைப்பிரார்த்திப்போம்.

(Special to Chakravarthini).

# நாலடியார் வசனம்.

## அறத்துப்பால்.

அறமாவது மநுமுதலிய நூல்களில் விதித்தவற்றைச் செய்தலும், விலக்கியவற்றை ஒழித்தலுமாம்; பால்—பகுதி அல்லது பாகமாம்.

### 1-வது செல்வ நிலையாமை.

அஃதாவது செல்வத்தினது நிலையாமையைக் கூறுதலாம். செல்வம்—காணி, மனை முதலியன; நிலையாமை—நிலைபெறுதலில்லாத தன்மை.

செல்வர் அஃதுடையவராகவே யிருப்பதில்லை யெனல்.

(1) அறுவகைச் சுவையுமுடைய உணவுகளை மனையாள் அன்பாகவிருந்து (தனித்தனி) உண்பிக்க, (ஒவ்வொன்றிலும்) மற்றொரு கவளத்தை (இது வேண்டாமென்று குறிப்பித்துத்) தள்ளியுண்ட செல்வமுடையாரும், (தீவினையின் வசத்தால்) வறுமையுடையவராய், (தம்மைப் பிறர் அறிதலில்லாத) ஓரிடத்திற் சென்று கூழை யிரக்கின்றவராகின்றனர்; அன்னமாயின், செல்வமென்பதொன்று நிலையாக விருப்பதாக (நெஞ்சில்) வைத்தற்குரியதன்றாம்.

(கருத்து.) மனையா ளருகேயிருந் தன்னை யன்பாக வூட்டவுண்ட பெருஞ்செல்வரும் தீவினையின் வயத்தால், வறிஞராய், யாசித்தற் குரியராகின்றனர்; அதனால், யாம் செல்வமுடையோமென்று எவரும் கர்வமடைதல் கூடாதென்பதாம்.

அறுவகைச்சுவை-கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பனவாம்.

செல்வமுள்ளபோது செய்வதிதுவெனல்.

(2) செல்வம் எவரிடத்திலும் நிலை இல்லாமை பொருந்த நில்லாது வண்டியின் சக்கரம் (மேல் கீழாகவும் கீழ் மேலாகவும் மாறி வருதல்) போல மாறிவருவதாம்; (அதனால், ஒருவர்) குற்ற

மற்ற பெருஞ்செல்வம் (தமக்குக்) கிடைக்குமாயின், அது கிடைத் தது முதற்கொண்டு, உணவைப் பலரோடுங்கூடி யுண்ணக்கடவர். பலசென்றது-உறவினர், நட்பினர், வறியவர் முதலாயினோரை.

(க-து.) செல்வம் மாறுமியல்புடையதாக விருத்தலின், அது கிடைக்குமாயின், அதுகொண்டு பலரோடுங்கூடி உணவுண்டல் வேண்டுமென்பதாம்.

அரசரும் தம் செல்வமிழந்து
வருத்த முறுதற்குரியராகின்றன ரெனல்.

(3) யானையினது பிடர்மீது சிறப்பாக வெண்கொற்றக் குடையினது நிழற்கீழிருந்து, சேனைகளுக்குத் தலைவராகச் சென்ற அரசரும், தீவினைவந்து கெடுப்பதால், (தமது கிளைமையி னின்றும்) வேறுபட்டு, தாம் மணஞ்செய்துகொண்ட மனைவியரைப் பகைமன்னர் கொண்டுபோகக் கெடுக்கின்றனர். (ஆதலால் செல்வ மிருப்பது கொண்டு செருக்கடைதல் கூடாதென்பதாம்).

(க-து.) யானையின்மீதேறி யானை, குதிரை, தேர் காலா ளென்னும் நால்வகைச் சேனையுஞ் சூழச்செல்லு மியல்புள்ள அர சரும் தீவினையின்வசத்தால் தம் செல்வமிழந்து, தம் மனைவியரைப் பகைவர் அபகரித்துக்கொண்டு செல்ல வருத்தமுறுகின்றவ ராகின்றன ரென்பதாம்.

செல்வம் நிலையற்றதாயும், வாழ்நாளானது குறைந்துவருவதாயு
மிருத்தலின், அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமெனல்.

(4) வாழ்நாளோ விரைந்துவிரைந்து கழிவதாக விருக்கின் றது; யமனோ கோபித்து (கொல்ல) நெருங்கி நெருங்கி வருகின் றான். (ஆதலால் ஒவ்வொருவரும்) இவை அழியமாட்டா, இவை அழியமாட்டா (என்று கருதிய பொருளைக் காத்) அழியா திருப் பனவென்றெண்ணாது, (தந்தமக்குப்) பொருந்திய அறங்களைப் பொருந்தியவாறு செய்யக்கடவர்; அவ்வாறு செய்வனவற்றையும் விரைந்து செய்யக்கடவர்.

(க-து.) அழியாதென்று கருதும் பொருளும் அழிவதையும் சாவு தப்பாதிருப்பதையுங் கவனித்து, மறுமைக்குற்ற துணையாக அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

செல்வத்தைக்கொண்டு, அறத்தைச் செய்தவர்
அடையுங்கதி யீதுவெனல்.

(5) யாதாவதொரு பொருள் தமது கையிற் கிடைக்குமாயின், (இதனைக் கொண்டறஞ் செய்வது) நாளைக்காகட்டுமென்று கருதி, அதனைப் பத்திரப்படுத்தி வையாது, கிடைத்த அப்பொழுதே அதுகொண்டறஞ் செய்தவர் யமன் பாசத்தாற் கட்டியிழுத்துச் செல்லுகின்ற பாலையில வழியினின்றுந் தப்பிச் சுவர்க்கத்திற்குச் செல்லுவார்.

பாலை—நீரும் நிழலுமில்லாது பரந்துள்ள மணற்பூமி.

(க-து) நாளைக்காகட்டுமென்று நினையாது பொருள்கிடைத்த போதே அதுகொண்டு தருமஞ் செய்பவர் மறுமையில் யமலோகத்தை யடையாது சுவர்க்கலோகத்தை யடைவரென்பதாம்.

சாவைக்கடத்தல் முடியாதாகலின், தருமத்தை
விரைந்து செய்தல் வேண்டுமெனல்.

(6) (எவ்வொருவர்க்கும் கடவுள்) ஏற்படுத்திய நாள்கள் தமது அளவினின்றுங் கடக்கமாட்டா; யமனைவிட்டுத் தப்பிக்குதித்தோடிப் பிழைத்தவர் இவ்வுலகத்திலொருவருமில்லை. மிகவும் பெரும்பொருளை (அனுபவியாது சேர்த்து) வைத்திருக்கின்றவர்களே! நாளைக்கே பிணப்பறையானது தழீஇம் தழீஇம் என்னும் இசையுண்டாக (பறையடிப்போரால் உங்களைக் குறித்து அடிக்கப்படுமாயினும்) அடிக்கப்படும்; (ஆதலால் நீங்கள் உங்களுடைய பொருள்களை ஏழைகளுக்குப்) பங்கிட்டுக் கொடுங்கள்.

(க-து) கடவுள் ஏற்படுத்திய நாளுக்குமேல் ஒருவருமிருத்தல் முடியாது; ஆகலின், பொருளுடையோர் தமது பொருளை விரைந்து அறநெறியில் செலவிடல் வேண்டுமென்பதாம்.

அறம் புரியாதார் மக்களாய்ப் பிறந்தவராகா ரெனல்.

(7) (மக்களே!) யமன் சூரியனைப் படியாகக்கொண்டு நாள்தோறும் உங்களுடைய ஆயுள்நாளாகிய தானியத்தை யளந்துகொண்டு வருகின்றான்; (ஆதலால் நீங்கள்) மிகவும் தருமத்தைச் செய்து கருணையுடையவராகுங்கள். (அவ்வாறொழுகாதவர்) எத்தன்மையாராயிருப்பினும் அவர் மக்களாய்ப் பிறந்தும் பிறவாதார் போலவே ஆவர்.

(க-து.) ஆயுள் விரைந்து விரைந்து கழிந்துபோவதைக் கவனித்து, அறத்தைச் செய்து அருளுடையவரா யிருப்பவரே மக்களாய்ப் பிறந்தவராவர்; மற்றவர் மக்களாய்ப் பிறந்தவராகா ரென்பதாம்.

### உலோபிகள் செல்வம் விரைந்து கெடுமெனல்.

(8) யாம் செல்வமுடையவரா யிருக்கின்றோமென்று இறுமாந்து தாம் (இறந்தபின்) செல்லுமிடத்தை யாலோசித்தறியாத புல்லறிவாளரது பெருஞ் செல்வமானது பகற்காலத்தில் கருமேகத்தினின்றும் தோன்றிய மின்னலைப்போலத் தோன்றித் தானிருந்த விடமுந்தெரியாமலழிந்துபோம். புல்லறிவாளர்-அற்ப புத்தியுடையவர்.

(க-து.) புல்லறிவாளர் செல்வமுள்ளபோது தாம் செய்வது என்றுணராது உலோபியாயிருக்கின்றனர்; அவரது செல்வம் கொள்ளை, வழக்கிடல் முதலியவற்றின் வாயிலாக விரைந்து கெடுகின்றதென்பதாம்.

### உலோபி பொருளுடையவனு யிருப்பினும் அஃதில்லாதவனே யாவனெனல்.

(9) (ஒருவன் உண்ணவேண்டியவனாக உணவை) உண்ணாமலும், (தன்னைப் பிறர்) மதித்தலைப் பெறச் செய்யாமலும், புகழுண்டாதற்குரிய செயல்களைச் செய்யாமலும், உறவினரது துன்பங்களை நீக்காமலும், (யாசகர்க்கு ஒன்றும்) கொடாமலும், வீணே பொருளை (பத்திரஞ் செய்து) காத்துக்கொண்டிருப்பானாயின், ஐயோ! (அவன்) அப்பொருளை இழந்துவிட்டவனுவனென்று (அறிவுடையவரால்) நினைக்கப்படுவான்.

(க-து.) பொருளுள்ளபோது அதுகொண்டு செய்தற்குரியவற்றை உலோபகுணத்தாற் செய்யாது, அதனைக் காத்துக்கொண்டிருப்பவன், அதன் பயனை யடையாமையால், அவன் பொருளிருந்தும் இல்லாதவனே யாவனென்பதாம்.

### உலோபிகள் பொருள் பிறர்க்கே பயன் தருவதா மென்பதற்கோர் உதாரணங்கூறல்.

(10) (தாமுடுத்தற்கேற்ற வுடையை) உடுக்காமலும், (உண்ணுதற்கேற்ற வுணவை) உண்ணாமலும், தம்முடம்பை (தன் துணைவு [illegible], நல்லுறக்கங் கொள்ளாமை முதலியவற்

ஞல்) வருத்தியும், (பலன் தருவதில்) தவறுதலில்லாத நல்ல தருமங்களைச் செய்யாமலும், (எப்படிப்பட்ட சமயத்திலும் ஒருவர்க்கும் ஒன்றும்) கொடாமலும் பொருளைச் சம்பாதித்து வைத்திருப்பவர் (தம் பொருளைக் கள்வர் முதலியோர்க்கு நிச்சயமாக) இழந்து விடுவார். இதற்குச் சாட்சி (பல மலரினின்றும் தேனைக்) கொண்டு வந்து சேர்த்து வைத்திருக்கின்ற தேனீயேயாம்.

(க-உ.) தேனீக்கள் சேர்த்துவைத்த தேனைப் பிறர் வந்து அவற்றை வருத்திக்கொண்டு போதல்போல, உலோபிகள் சேர்த்துவைத்த பொருளைக் கள்வர் முதலியோர் வந்து அவர்களை வருத்திக் கொண்டு போவரென்பதாம்.

## 2 - வது இளமை நிலையாமை.

அஃதாவது இளமைப் பருவத்தினது நிலையாமையைக் கூறுதலாம். செல்வத்தினது நிலையாமையை யுணர்ந்தவர்க்கன்றி மற்றவர்க்கு இளமை நிலையாமை செவ்விதின் விளங்காமையின், செல்வ நிலையாமையின் பின் இளமை நிலையாமை வைக்கப்பட்டது.

நல்லறிவாளர் விரைந்து துறவறத்தை மேற்கொள்வாரெனல்.

(1) குற்றம் நீங்குவதில்லாத நிலைபெறுதலுள்ள (தமது) இளமைப் பருவத்தைக் கண்டு (இஃதென்று மிருக்குமென்று) மகிழ்ச்சி யடைந்திருப்பவர் (முதுமைப் பருவத்தில்) கோலையூன்றிக் கொண்டு வருத்தத்துடன் எழுந்திருக்கின்றவரானின்றனர் (என்பதுணர்ந்த) நல்லறிவாளர் (நிச்சயமாக நமக்கும்) முதுமைப் பருவம் வருமென்று நிச்சயித்து, இளமைப் பருவத்திலேயே (இல்லறத்தினின்றும் நீங்கித்) துறவறத்தை மேற்கொண்டொழுகுகின்றனர்.

குற்றம்-காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம் (உலோபம்) மானம், உவகை, மதமென்பனவாம். இவை இளமைப்பருவமுடையாரிடத்து பிறைமதிபோல வளர்ந்து வருவனவாயிருத்தலின், 'குற்றம் நீங்குவதில்லாத' என்று கூறப்பட்டது. நல்லறிவாளர் - இஃதறிவது இஃதறியாததென்னும் விவேகமுடையவர்.

(க - உ.) நல்லறிவாளர் இளமைப் பருவம் விரைந்து மாறிப் போவதையும் முதுமைப் பருவத்தில் தாம் செய்ய வேண்டிய தவத்தைச் செய்ய முடியாமையையும் நோக்கி, விரைந்து துறவறத்தை மேற்கொள்ளுகின்றன ரென்பதாம்.

இளமைப் பருவத்தை நோக்கி மகிழ்ச்சியடைதல் கூடாதெனல்.

(2) (மூடமனமே! ஒருவனுக்கு முதுமைப்பருவம் வந்து போது அவனேறிக் கட்டினவா யிருந்தவாது) கட்டின் சம்பந்த மனைத்தும் அற்றுப்போகின்றன; (அவனது) மனைவியர் (அவனி டத்து வைத்துள்ள) அன்பு குறைந் தொழுகுகின்றனர்; (இவ்வா றவர்க ளொழுகுவதால் அவன் அவர்கள்மீது வைத்துள்ள) அன் பின் பெருக்கங்களும் குறைந்துபோகின்றன. உலக வாழ்க்கை யிவ்வா றிருப்பதால் இவ்வுலக வாழ்வால் வரும்பயன் யாதாம்? கடலில் மூழ்குகின்ற மரக்கலத்தி லிருப்பவராது அழுகுரல்போல (உறவினரது) அழுகுரல் விரைந்து வருவதாக விருக்கின்றது; (இவற்றை நீ) ஆலோசித் துணரக் கடவாய். (இவற்றை நீ ஆலோ சித்துணர்ந்தால் இளமைப் பருவத்தைக் கண்டு மகிழ்ச்சியடை யாது விரைந்து துறவறத்தை மேற்கொள்ள விரும்புவாய்.)

(க - து.) இல்லற வாழ்க்கை முதுமைப் பருவத்தில் நன்மை தருவதாக விருந்தலின், இளமைப் பருவத்தைக் கண்டு மகிழ்ச்சி யடையாது விரைந்து துறவறத்தை மேற்கொண்டு செய்யவேண் டியதைச் செய்யவேண்டு மென்பதாம்.

ஆசையுடையவர் துறவற மார்க்கத்திற் செல்லாரெனல்.

(3) சொல்லோசை குறைந்து, தடியெடுத்துக்கொண்டு, தளர்ந்த நடைகொண்டு, பற்கள் விழுந்து, தேகம் (நோயால் இது கெட்டதென்று) பழிக்கப்படுமாயும் இவ்வாழ்க்கையிலிருந்து காமமார்க்கத்திற் செல்லும் கருத்துடையவர்க்கு இன்பத்தைத் தரும் மார்க்கத்திற் செல்லும்வகை யில்லையாம்.

காமமார்க்கம் - பொன் வேண்டும், பூமி வேண்டும், பெண் வேண்டுமென்று கருதி அவற்றைத் தேடும் (தீய) நடிழக்கமாம்; இன்பத்தைத் தரும் மார்க்கம் - துறவற வொழுக்கமாம்.

(க - து.) அறிவிலார் உலகவின்பத்தைக் கருதி, துறவறத்தை மேற்கொண்டு சுகமடையாது சாமளவும் சங்கடமடைகின்றன ரென்பதாம்.

பெண்களின் இளமையைக்கண்டு மயங்குதல் கூடாதெனல்.

(4) முதுகுவளைந்து, தளர்ச்சியடைந்து, தம் நடுக்கங் கொண்டு, தடியை யூன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிச் செல்லுகின்ற இவரிடத்தும் இவளது மையிலுள்ள வைஞ்சு

கோல் (இவளுக்கு) அம்மனைக்கோலா யிருந்த நாளில் (அவளது) இளமைப் பருவத்தில்) (உறுதியில்லாத) மோகத்தைக் கொண்ட புருஷர்க்கு ஆசை யுண்டாயிருக்கும்.

அம்மனைக்கோல் - அம்மானை யாடுதற்கு கருவியாயுள்ள தடி. அம்மானை யென்னும் ஒருவகை விளையாட்டாகும் பருவம் இளமைப் பருவமாம்.

(க - ரு.) முதுமைப் பருவத்தால் அருவருத்தற்குரிய ஸ்திரீ இளமைப் பருவத்தில் பிறர் விரும்புதற்குரிய அழகுடையவளா யிருந்தாள்; அதனால் பெண்களின் இளமையைக் கண்டு மயங்கி, இல்லறத்திலேயே யிருந்துவிடுதல் கூடாதென்பதாம்.

பெண்களின் இளமைப் பருவத்தைக் கண்டு மயங்குதல்
கூடாதென்பதற்கு மற்றொரு காரணங் கூறல்.

(5) எனக்குத் தாயாயிருந்தவள் என்னை (பெற்ற காலத்திலே, பெற்று சிறிது காலங் கழித்தோ) இவ்வுலகத்தை விட்டு விட்டுத் தனக்கொரு தாயைத் தேடிச் சென்றனள் (இறந்தனள்); அவளுக்குத் தாயாயிருந்தவளும் அவ்வாறானள்; அதனால் இவ்வுலகமானது ஒருதாய் மற்றொரு தாயைத் தேடிக்கொண்டு செல்லும் வழமையுடையதா யிருக்கின்றது.

(க - ரு.) தாயும் தான்பெற்ற பிள்ளையை விட்டிறந்து போகின்றாள்; அதனால் இளமைப் பருவமுடையவர் முதுமைப் பருவம் வருமளவு மிருப்போமென் றெண்ணாது விரைந்து துறவறத்தை மேற்கொள்ளல் வேண்டுமென்பதாம்.

அறிவுடையாரிடத்து இளமைப் பருவத்தைக் கண்டு
மகிழ்தலில்லை யெனல்.

(6) வெறியாடலைச் செய்கின்ற பலிக்களத்தில் (வெட்டுதற் பொருட்டுக் கொண்டுவந்துள்ள) ஆடு கத்தியை வைத்துள்ள பூசாரியினது கரத்தில் தளிர்கள் நிறைந்த பூமாலை தன் முன்னே (தொங்கி) அசையக்கண்டு அதனை உணவாகவுண்டு களிப்பது போன்ற களிப்பு அறிவுடையாரிடத்து இல்லையாம்.

வெறியாடல்-தெய்வமாடல்; பலிக்களம்-பிராணிகளைக் கருவியால் வதைசெய்யுமிடம். பலிக்களத்துள்ள ஆடு பூசாரியின் கையிலுள்ள பூமாலையைக் கண்டுகொண்ட களிப்பு பிறவற்புமா

மன்றோ? அங்ஙனமே ஒருவர் தம்மிளமைப் பருவத்தைக் கண்டு கொண்ட களிப்பும் மிக வற்பமாமென இதனால் உணர்த்தியவா றறிக.

(க-து.) ஆடு தன்னைப் பலியிடுவிடத்துப் பூசாரியின் காத்தி லுள்ள மாலையின் தளிரை யுண்டுகளிப்பதுபோல அறிவுடை யார் இளமைப் பருவத்தைக்கண்டு களிப்படையாரென்பதாம்.

இளமைப் பருவத்தைக்கண்டு ஏமாந்துபோதல்
கூடாதெனக் கூறல்.

(7) இளமைப் பருவமானது குனிச்சி பொருந்திய சோலை யினிடத்துள்ள பயன்தரும் மரத்தின் கனிகளெல்லாம் உதிர்ந்து வீழ்ந்தாற்போல்வதாம்; (ஆதலால் அறிவில்லாதவரே! நீங்கள்) மிகப்பெரியதான வேல்போலும் கண்களுடையவரென்று இவரை விரும்பாதிருங்கள்; பின்னொரு காலத்திலிவரும் (முதுமை) குனி யப்பெற்றுக் கோலையே கண்களாக வுடையவராவர்.

பயன்தரு மரம்-பூ பிஞ்சு முதலிய பயன்களைத் தருதற்குரிய விருட்சம்; பயன்-பிரயோசனம். கோலையே கண்களாக வுடைய வராதல் ஊன்றுகோல் பிடித்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடத்தலையுடையவராதலாம்.

(க-து.) இளமைப்பருவம் மரத்தின்கனி விரைந்து உதிர் வதுபோல்வதாம்; ஆகலின், பெண்களின் இளமைப் பருவத் தைக்கண்டு மயங்கி யேமாந்துபோதல் கூடாதென்பதாம்.

அறிவுடையார் இளமைப்பருவம்
யென்று மிருக்குமென் றெண்ணுவதின்றெனல்.

(8) (தங்களுக்கு இன்னும்) வயது எவ்வளவிருக்கும்? பல் லின் உறுதி யெவ்வாறிருக்கின்றது? (உண்ணும்போது பதார்த் தங்களைப் பற்களின்) இரண்டு முனைகளாலும் (மென்று) உண்பரா வென்று (பிறரால் வயோதிகரது) உள்ளம் முறையாக ஆராய்ச்சி செய்யப்படுதலால், அறிவுடையார் உடம்பின்னிளமைப் பருவத்தை (நிலையாக) எண்ணார். பிறர்-உறவினர், நட்பினர் முதலாயினோர்; உள்ளம் மனக்கருத்து.

(க-து.) அறிவுடையார் வயோதிகரிடத்துப் பிறர் வந்து உமக்கென்ன வயது? பல்லுறுதியாக விருக்கின்றதா? வென்றுற்

றுடக்கத்தனவாக விசாரித்து வருதலைக் கவனித்து, இளமைப் பருவத்தை நிலையாகக்கருதி மயங்கியிருக்கின்றனரென்பதாம்.

பின்னை அறஞ்செய்வோமென் றெண்ணுவது
பெரும்பிழையாமெனல்.

(9) பெருங்காற்றடிக்கும்போது அதனால் (ஒரு மரத்தில்) முற்றியிருந்த கனிகள் விழாதிருக்க, (முற்றாதுள்ள) நல்ல காய்கள் உதிர்தலுமுண்டு; (அதனால், அறிவினர்களே! நீங்கள்) தருமகாரியத்தைப் பின்னறிந்து செய்வோம்; யாமிப்போது இளமைப் பருவமுடையவரா யிருக்கின்றோமென்று நினையாது பொருளுள்ள போதே அதனைச் சிறிதும் மறைத்துவையாமல் தருமத்தைச் செய்வீராக.

(க-து.) முதியவரே சாவர், இளையவர் சாவாரென்னும் நியமமில்லை யென்பது, பெருங்காற்றடிக்கும்போது கனிகள் விழாதிருப்பதாலும், காய்கள் வீழ்வதாலும் தெரிகின்றது. அதனால், பின்னே பார்த்துக்கொள்ளுவோ மென்றெண்ணாமல் அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

யமன் வருவது நிச்சயமாகலின், இளமைப் பருவத்தைக் கண்டு,
ஏமாந்து போகாது விரைந்து அறஞ்செய்ய வேண்டுமெனல்.

(10) ஆயுள்முடிந்த ஆள்களைத் தேடிப்பார்த்துத் திரிகின்ற கருணையில்லாத யமனிருக்கின்றான்; அதனால் (அறிவினர்களே! நீங்கள்) தோட்கோப்புப் போன்றதாகிய தருமத்தை இளமைப் பருவத்திலேயே செய்து, (துணையாகக்) கொண்டு பிழைத்துப் போவீராக. (வயிற்றிலுள்ள) கருவை வெளிப்படச்செய்து, சிசுவைத் தாயானவள் கூவியழுது கதறும்படி கொண்டுபோய் விடுகின்றான் யமன்; அதனால் அவனது வஞ்சகச்செயலைக் கவனித்தொழுகுதல் (உமக்கு) நன்மையைத் தருவதாம்.

தோட்கோப்பு-(பிரயாணஞ் செய்பவர் தமக்குதவியாகத்) தோளில் கோத்துக்கொள்ளும் சோற்றுமூட்டை.

(க-து.) யமன் குழந்தையையும் தாயலறக் கொண்டுபோய் விடுகின்றான்; அதனால் இளமைப் பருவத்தைக்கண்டு மயங்காது, மறுமைக்குற்ற துணையாக அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

# சிந்தனாமிர்தம்.

(1) பயமின்றித் துணிச்சலாய் ஒரு காரியத்தில் பிரவேசித்தல் தைரியமாகாது; ஆனால் நியாயமான ஒரு விஷயத்தில் பிடிவாதமான மனதுடன் முயற்சித்தலே தைரியமாகும்.

(2) அந்நியர்பால் எவற்றை அநீதம் என்று நாம் கொள்ளுகிறோமோ அவை நம்மை மேலான நடவடிக்கைகளுக்கும், உயர்ந்த விதமான உயிர் வாழ்க்கைக்கும், அகண்ட தர்ம குணத்துக்கும், மன்னிக்கும் சுபாவத்துக்கும், ஒவ்வொரு நியாயக் கேட்டையும் சரிப்படுத்தவும், ஒவ்வொரு கண்ணிலுமுள்ள கண்ணீரைத் துடைக்கவும் சித்தமாயுள்ள சர்வஞ்ஞத்துவக் கடவுளின் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்தலுக்கும் நம்மைத் தூண்டக்கடவதாக.

(ஆல்பர்ட் வெப்)

(3) வீரம் என்பது ஒரு குலத்தாரின் அல்லது வம்சத்தாரின் அல்லது தேசத்தாரின் அறிகுறியாகுமாயின், அது சிறப்பாக ஒவ்வொரு குலமகனிடத்திலும், குலமகளிடத்திலும் விளங்கல் வேண்டும். (ரஸ்கின்)

(4) தேசங்களில் நன்றாக உழவுத் தொழில் செய்தல் அவற்றின் செழிப்புக்குத் தக்க மாதிரியல்ல; ஆனால் அவற்றின் சுவாதீனத்துக்கும் கட்டவிழ்ந்த தன்மைக்கும் தக்கவாறும்.

(மாண்ட்டெஸ்க்)

(5) எல்லாக் குற்றங்களுக்கும் மேலான குற்றம் எதுவெனின், அது ஒரு குற்றத்தையும் உணராதிருப்பதே என்று நான் சொல்ல வேண்டும். (கார்லைல்)

(6) ராஜரீகத்தின் சாராம்சம் கண்டிதம் அல்லது சிக்ஷிப்பு என்பதே. (பிகோ)

(7) ஒரு தேச சரித்திரத்தில் முழுவிருப்பத்தை யுண்டு பண்ணுவ தெதுவெனின், அது அத்தேசத்தின் ஏழைகளின் கஷ்ட நஷ்டங்களும், அதிர்ஷ்டமுமேயாம். (எமெர்சன்)

(8) மனோதிடமிருக்குமாயின் ஒருவன் எவ்வளவு செய்யலாமென்பதும், சுவாதந்தரியத்தோடு கூடியிருப்பானாயின் தன்னை எவ்வளவு தூரம் உயர்த்திக்கொள்ளலாமென்பதும், நமக்குத் தெரியா. (வான்மல்லர்)

(9) சுக்கானுக்குப் பதில் சொல்லாதவன் பாறைக்குப் பதில் சொல்லவேண்டும். (ஆர்ச்பிஷப் ஹோலி)

(10) சன்மார்க்கமானதாய் இல்லாததெதுவும் இராஜாங்க முறைக்கு ஒத்ததாயிருக்க முடியாது. (கிளாட்ஸ்டன்)

(11) ஒருவன் எவற்றிற்காக உயிர்வாழ வேண்டுமெனின், உதவியில்லாமலிருக்கும் சத்தியத்திற்கும், எதிர்ப்பைக் கோரும் தீமைக்கும், எதிர்காலத்தில் விளையப்போகிற நன்மைக்கும், நான் செய்யக்கூடிய நன்மைக்குமேயாம். (ஜி. எல். பாங்க்ஸ்)

(12) நம் தேசமும், நம் முழுதேசமும், வேறொன்றையும் பாராட்டாத நம் தேச எண்ணமுமே நமக்கு இலக்காக இருத்தல் வேண்டும். (டி. வெப்ஸ்டர்)

(13) ஒருவனுடைய பாரத்தைச் சுமப்பதைக் காட்டிலும் சுமையுள்ளவனைப் பலவானாகச் செய்து அவனையே தன் பாரத்தைச் சுமக்கச் செய்வது மேலானதாகும். (சீனப் பழமொழி)

## பரோபகாரம்.

1. சந்தனமரத்தின் அடி சர்ப்பங்களாலும், சிகரம் பட்சிகளாலும், சாகை குரங்குகளாலும், புஷ்பம் வண்டுகளாலும் ஆசிரயிக்கப் படுகின்றன. இங்ஙனம் சத்துக்களின் விபூதி பரோபகாரத்தின் பொருட்டே உதவுகின்றது.

2. சம்பத்து ஜலத்திலுண்டாகும் அலையைப்போல் நாசத்தையடைவதாம். யௌவனம் 3—4 தினங்க ளிருப்பதாம். சரத்காலத்திலுண்டாகும் மேகபங்திகளைப்போல் சிதறிப்போகும் தனத்தினாலென்ன பயன்? பரோபகாரமே செய்தல் வேண்டும்.

3 சுரோத்திரமானது சப்தங்களைக் கேட்கும் பொருட்டேயன்றிக் குண்டலமணிவதன் பொருட்டன்றும். கை தானஞ்செய்யும்பொருட்டேயன்றிக் கங்கணமணிதற் பொருட்டன்றும். சரீரமானது பரோபகாரஞ் செய்யும் பொருட்டேயன்றிச் சந்தனத்தைப் பூசி அலங்கரித்துக் கொள்ளும் பொருட்டன்றாம்.

4. எவர்கள் சுய நலத்தை விட்டுப் பரோபகாரத்தையே செய்கின்றனரோ அவர்களே சத்புருஷராவர். எவர்கள் சுய நலத்தைவிடாது பரோபகாரஞ்செய்கின்றனரோ அவர்கள் சாமான்ய

புருஷர்களாவர். எவர்கள் சுயநலத்தின் பொருட்டுப் பரோப காரஞ் செய்கின்றனரோ அவர்கள் மனிதராக்ஷச ரெனப்படுவர். எவர்கள் ஒருவர் செய்யும் பரோபகாரத்தைக் கெடுக்கின்றனரோ அவர்களை யின்னரென்று கூறத்துணியோம்.

5. கோடிக்கணக்கான கிரந்தங்களில் எது கூறப்பட்டிருக்கின் றதோ அதனைப் பாதிச் சுலோகத்தினால் கூறுகின்றேன். அஃதா வது பரோபகாரம் புண்யத்தின் பொருட்டும், பரத்துரோகம் பாபத்தின் பொருட்டுமாம்.

## பாரான்னம்.

1. வித்தையை விலைக்குக் கொடுத்தலும், பாலஸ்திரீ கமனஞ் செய்தலும், பாரான்னத்தைப் புசித்தலும் ஆகிய இம்மூன்றும் புருஷர்கட்கு மிகவும் இழிவைக் கொடுப்பனவாம்.

2. ஒவ்வொரு தினமும் தனக்கு ருசியான பாரான்னத்தை விரும்பி ஜீவிப்பவனது ஜன்மம் பயனற்றதாம்.

3. துஷ்டர்களிடத்திருந்து சர்ப்பத்தைப் பார்த்துப்பயப்படு வதுபோல் பயந்து விலகுபவனாகவும், பாரான்னத்தை விஷம்போல் பார்ப்பவனாகவும், ராக்ஷசியைப் பார்த்தால் எங்ஙனமோ, அங்ஙனம் ஸ்திரீகளிடத்திருந்து விலகுபவனாகவு மெவனிருக்கின்றானோ அவன் கல்வி கற்றவனாவன்.

4. அந்நிய தேசத்தில் வாசஞ் செய்யும் ரோகியும், பாரான் னத்தைப் புசிப்பவனும், பரர்களை ஆசிரயித்து உபஜீவனஞ் செய் பவனுமாகிய இவர்கள் ஜீவித்திருப்பதைவிட மரிப்பது விசிராந் தியைக் கொடுக்கும்.

5. மூர்க்கத்தன்மை கஷ்டமாம். யௌவனத்தில் தரித்தி ரத் தன்மை மிகவும் கஷ்டமாம். பரக்கிரக வாசமும், பாரான்ன மும், கஷ்டத்திலும் கஷ்டமாம்.

## யாசகம்.

1. சரீரத்தில் நடுக்கமும், வாயில் மலினத் தன்மையும், தீனத் தன்மையும், குளறிய சொல்லும் ஆகிய இந்தச் சின்னங் கள் மரண காலத்தி லிருப்பன போன்று யாசகனிடத்து மிருக் கின்றன.

2. திருணத்திலும், பஞ்சிலும், யாசகன் லகுத்வமுடையவனயிருந்த போதிலும் லகுத் தன்மையை யடைகின்றான். ஆனால் இவன் வாயுவால் ஏன் அடித்துக்கொண்டு போகப்படுகின்றானில்லையெனின், தன்னிடத்தும் யாசிப்பானென்னும் ஐயத்தினாலாம்.

3. தேஹி என்னும் வசனத்தைக் கேட்ட மாத்திரத்தில், ஹ்ருதயத்திலிருக்கும் ஸ்ரீ, லஜ்ஜை, தீ (புத்தி), திருதி (தைர்யம்) கீர்த்தி என்னும் பஞ்ச தேவதைகள் வாயின் வழியாக வெளியே செல்லுகின்றன.

4. தரித்திரமென்னும் அக்னியால் தபிக்கப்பட்டவன் சந்தோஷமென்னும் ஜலத்தினால் சாந்தியை யடைவன். யாசகனது உள்ளிருக்கும் ஆசையாகிய அக்னி பற்றிய காலத்து, அதனை யெதனால் சாந்திசெய்தல் கூடும்?

5. தேஹி என்னும் அக்ஷரத்துடன், வாயின் வழியாகப் பிராணன் வெளியே செல்லுகின்றது. கொடுக்கின்றேனென்னும் தாதாவின் வாக்கைக் கேட்டமாத்திரத்தில் காதின் வழியாக மீண்டும் (பிராணன்) உள்ளே பிரவேசிக்கின்றது.

யாசிப்பவனது சற்குணங்களை, யாசகமானது சேவை மானத்தைக் கெடுப்பதுபோலவும், சந்திரன் தமஸைக் கெடுப்பதுபோலவும், ஜரா லாவண்யத்தைக் கெடுப்பதுபோலவும், ஹரிகதா ச்ரவணம் துரித (பாவ)த்தைக் கெடுப்பதுபோலவும் கெடுக்கின்றது.

7. காசின்பொருட்டு சர்க்கரைக் கதலிப் பழத்தின் ரசத்தைப் போன்ற மதுரமாகிய வாக்கினால் நான் யாசிக்கமாட்டேன்; மற்றோ, பழங்கந்தையை யுடுத்திக்கொண்டே குசேலருக்குத் தனத்தைக் கொடுத்தவரும், ஸ்ரீபதியும், தயாசிந்துவும் ஆகிய பகவானை நான் ஆச்ரயிப்பேன்.

8. அக்ஷரங்களைப் படித்திலையா? அல்லது இன்றோ? ஒருகால் படித்திருந்தபோதிலும் மறந்தனையா? என்னும் யாசகர்களது சம்சயத்தை நிவாரணஞ் செய்யும்பொருட்டு "ந" என்னும் அக்ஷரத்தைச் சிருஷ்டித்தார்.

9. சர்வ சற்குணங்களும் நிறைந்தவன், புத்திசாலி, சாது, மகாத்மா, சூரன், ஒழுக்கமுடையவன், பொறுமையுள்ளவன்

முதலிய யாவரும் தேஹீ என்னும் வசன உச்சாரண மாத்திரத்
தினால் மிகத் தாழ்வை யடைகின்றனர். ஆகையினால் தேஹீ என்
னும் வசனத்தைக் கூறுதொழிக.

## தரித்திரம்.

1. ஏ தரித்திரமே! உனக்கு நமஸ்காரம். உன்னுடைய
பிரசாதத்தினால் நான் மகாசித்தியை யடைந்துவிட்டேன். அஃதி
யாதெனின், நான் உலகமுழுமையும் பார்க்கின்றேன்; ஆனால்
என்னை ஒருவரும் பார்ப்பதில்லை; இஃதொரு மகா சித்தியன்றோ!

2. இவ்வுலகத்தில் தனவான்களுக்கு அன்னியர்களும் பந்
துக்களாய் விடுகின்றார்கள். தரித்திரனுக்குப் பந்துக்களும் அன்
னியர்களாகி விடுகின்றார்கள்.

3. இரவில் மூட்டியும், பகலில் சூரியனும், இரண்டு சந்தியா
காலங்களில் அக்னியும், குளிரைப் போக்குவதற் குதவிசெய்கின்
றன.

4. தரித்திர அவஸ்தையை யடைந்த புருஷனது மகத்தான
புத்தியும், அரிசி, உப்பு, விறகு, நெய், வஸ்திரம் முதலியவற்றின்
சிந்தையினால் நாசத்தை யடைகின்றது.

5. தனமின்றி உறவினர்களின் கூட்டத்தில் உறைவதை
விடப் புலிபாம்பு முதலிய ஜந்துக்கள் நிறைந்த வனத்தில் வாசஞ்
செய்தலும், மரத்தடியி லுறைதலும், பத்திர பலங்களைப் புசித்த
லும், புற்றரையைப் படுக்கையாகக் கொள்ளுதலும், மரவுரியைத்
தரித்தலும், மிக மேன்மையாம்.

6. இந்த வஸ்திரம் என்னுடைய பிதாவின் அங்கத்திற்கு
அலங்காரமாக விருந்தது; பாட்டன் முதலியோர் யௌவனகாலத்
தில் தரித்திருந்ததுமிதுவே. அஃதிப்போது என்னால் தரிக்கப்
படுகின்றது. எனது புத்திரர்களும், பௌத்திரர்களும் இதனையே
தரிப்பார்கள்.

7. நித்திரை செய்கின்றான்; ஸ்நானஞ் செய்கின்றான்;
போஜனஞ் செய்கின்றான்; வேலையாக விருக்கின்றான்; உள்ளே
யிருக்கின்றான்; இப்போது பார்க்க அவசரமில்லை; காலையில் வா
என்றிவ்வாறு தனவான்களது வாயில் காப்போர்களால் தடுக்கப்

பட்ட அடியேன்களாகிய எங்களை ஏ லட்சுமிதேவி! உனது தாமரை மலர் போன்ற கடைக்கண்களினால் சிறிது கடாட்சித்தருள்வாய்.

## ஆசை.

1. ஏ ஆசையே! பகவானான கிருஷ்ணனிடத்திலுங் கூட உன்னுடைய சக்தி காணப்பட்டது; மனிதர்களிடத்திருப்பது பற்றி யாது கூறவேண்டும்? ஏனெனின், சர்வலோக வியாபியாகிய பகவான் தனது நிஜரூபத்தைவிட்டு ஆசையினால் மிகச் சிறிதாகிய வாமன ரூபத்தைக் கிரகித்தானன்றோ?

2. நரையானது முகத்தை ஆக்கிரமித்துக் கொண்டது; தலையில் வெண்மையாகிய நரைகள் வியாபித்திருக்கின்றன. அங்கங்களெல்லாம் தளர்வுற்றன. ஆயினும் ஆசையொன்று மாத்திரம் யௌவனப் பருவத்தை யடைந்திருக்கின்றது.

3. ஆசையென்னும் ஒரு சங்கிலியானது மனிதர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாக விருக்கின்றது; ஏனெனின், சாதாரணமான சங்கிலியால் கட்டுண்டவன் ஓரிடத்திலிருக்கின்றான். ஆசையென்னும் சங்கிலியால் கட்டுண்டவன் எங்கும் அலைகின்றான். சங்கிலியை யறுத்து விட்டவுடன் முடவனைப்போல ஓரிடத்தி லிருக்கின்றான். இஃதன்றோ ஆச்சரியம்.

4. விருத்தாவஸ்தை வந்துவிட்டது; அங்கங்கள் தளர்வுற்றன; பற்கள் விழுந்துவிட்டன; தடியைக் கையிலெடுத்துக் கொண்டு நடக்கச் சக்தியற்றவனாகித் திரிகின்றான்; ஆயினும் ஆசையைவிட் டொழிக்கின்றானில்லை.

5. தனமிருக்கின்றதென்னும் ஐயத்தினால் பூமியைத் தோண்டிப் பார்த்தோம்; பர்வதங்களிலுள்ள தாதுக்களைக் கொண்டு வந்து தங்கமாகுமென்னு மெண்ணத்தினால் புகைத்துப் பார்த்தோம்; தனவாஞ்சையினால் சமுத்திரத்தைத் தாண்டிப் பார்த்தோம்; அரசர்களையும், பிரபுக்களையும் மிகக் கஷ்டப்பட்டுச் சேவித்தோம்; மந்திரவாதஞ் செய்யும் பொருட்டு, இரவை ஸ்மசானத்தில் கழித்தோம். இதுகாறும் எம்மால் ஒரு திருணமும் அடையப்படவில்லை. ஏ ஆசையே! இனிமேலாயினும் எங்களை விட்டொழிவாய்.

6. சொற்பமாக விருப்போன் நூறு கிடைக்கவேண்டு மென்று ஆசைப்படுகின்றான்; நூறு கிடைத்தால் ஆயிரம்வேண்டு மென்றும், ஆயிரம் கிடைத்தால் லட்சம் வேண்டுமென்றும், லட்சம் கிடைத்தால் ஒரு சிற்றரசனாக வேண்டுமென்றும், ஒரு சிற்றரசனானால் சக்ரவர்த்தியாக வேண்டுமென்றும், சக்ரவர்த்தியானால் இந்திரபதவி வேண்டுமென்றும், இந்திரபதவி கிடைத்தால் பிரம்மபதவி வேண்டுமென்றும், பிரம்மபதவி கிடைத்தால் விஷ்ணுபதவி வேண்டுமென்றும், விஷ்ணுபதவி கிடைத்தால் சிவபதவி வேண்டுமென்றும் இவ்வாறு ஒன்றற்கொன்று மேலாகிய விஷயங்களை விரும்புகின்றான். ஆசைக் கொருகாலும் அவதியின்றாம்.

7. ஆசையென்னும் நதிக்கு மனோராஜ்யம் ஜலமாம்; திருஷ்ணை தரங்கமாம்; ராகம் முதலையாம்; விதர்க்கம் பட்சிகளாம்; மோகம் சுழியாம்; சிந்தை அதன் கரைகளாம்; வைராக்யமாகின்ற விருட்சத்தை நாசஞ் செய்வதாம்; இத்தகைய அதிக கனமாகிய நதியைச் சுத்த அந்தக்கரணமுடைய யோகிகள் கடந்து சந்தோஷத்தை யடைகின்றார்கள்.

---

### ஒரு குகை.

கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த மண்ணூர்காட்டில், கல்தச்சர்கள் மலையில் கல்வெட்டிக் கொண்டிருக்கும்போது ஒரு சதுரப் பளிங்குக்கல் தென்பட்டது. அதனைப் பெயர்த்துப் பார்த்தபோது அது ஒரு குகையின் முகமூடியாக விருந்தது; அது 4-பேரிருக்கத் தற்குரியதாயிருந்தது; அந்தக் குகையின் தரை சலவைக்கல் பரப்பியதாக விருந்தது; அங்குப் பூஜைக்குவேண்டிய சாமான்களும், ஒரு விளக்கும், ஒரு சொட்டாந்தடியும், ஒரு கத்தியு மிருந்தன. இந்தக்குகை கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. அனேகர் வந்து விநோதமாகப் பார்க்கின்றனர்.

### ஒரு விநோதசம்பவம்.

தென்மலையாளத்தில், கொடுங்கலூரில், சென்ற செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2-மணிக்கு 5-6 கற்கள் ஆகாயத்திலிருந்து விழுந்தன. கல் விழுவதற்குமுன்னர், பேரிடிமுழக்க சத்தங் கேட்டது. இந்தக் கற்கள் கனமாயிருக்கின்றன; கறுப்புச் சலவைக் கற்களைப்போலிருக்கின்றன. அவ்விடத்துள்ள சப்மாஜிஸ்டிரேட் வந்து கற்களை யெடுத்துக்கொண்டு போய்விட்டனர். கொச்சி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் வந்து மேற்படி சம்பவத்தைப்பற்றி விசாரணைசெய்து வருகின்றனர்.